# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜனவரி 2000 ஜீவியம் 5 மலர் 9

இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| மனித சுபாவம் | 2 |
| இறைவன் வரும் தருணம் | 15 |
| புதுவருட செய்தி | 17 |
| லைப் டிவைன் | 18 |
| அன்பர் கடிதம் | 31 |
| நம்மிடம் சின்சிரிட்டியும், நம்பிக்கையும் பரிசுத்தமுமிருந்தால், அன்னையிடமிருந்து நாம் பெற்ற நல்லது நம்மை விட்டுப்போகாது, நம்மிடமிருந்து விலகிய கெட்டது மீண்டும் நம்மை நோக்கி வாராது | 34 |
| அன்பர் அனுபவம் | 41 |
| தாயம்மாள் | 51 |
| வயிற்றுப் பிழைப்பைத் தேடுவது - கடைநிலை வாழ்வு<br>வசதியையும் அந்தஸ்தையும் தேடுவது - சாதாரண சமூக வாழ்வு<br>முன்னேற்றத்தை நாடுவது - ஆக்கபூர்வமான வாழ்வு<br>திருவுருமாற்றத்தை நாடுவது - ஆன்மீக வாழ்வு | 58 |

❈ ❈ ❈

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருட சந்தா ரூ.60/-**

# மனித சுபாவம் III

கர்மயோகி

**திறமை எப்படி உற்பத்தியாகிறது என்று தெரியுமா? அதைக் கற்றுக் கொள்ள வேண்டும். அந்தக் கோணத்தில் எல்லாச் செயல்களையும் கவனிக்க வேண்டும்.**

❊ ❊ ❊

பிறப்பாலும், வளர்ப்பாலும், பயிற்சியாலும், முயற்சியாலும் ஒருவர் திறமை பெறுகிறார். வளர்ப்பால் குடும்பமும், பயிற்சியால் பள்ளியும், பிறப்பால் கர்மமும், முயற்சியால் தானும் திறமையை ஒருவருக்கு அளிக்கின்றன.

எது பலன் கொடுக்கிறதோ அதுவே திறமை எனப்படும். பலனில் முடியாததை, திறமை என்று நாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம். படிப்பு பட்டத்தில் முடிய வேண்டும். ஒரு விசேஷம் நடத்தினால் அது பூர்த்தியாக வேண்டும். வீடு கட்டினால் பழுதின்றியிருக்க வேண்டும். வேஷ்டியைத் துவைத்தால், அது சுத்தமாக இருந்தால் வேலை பலன் தந்ததாகப் பொருள்.

தன் செயலை முறைப்படுத்தி பலன் தரும் வகையில் செயல் படுத்துவது (**organise**) அவசியம். படிக்கும் மாணவன் தன் புத்தகம், நோட்டு, பேனா, ஆகியவற்றைக் கவனமாக வைத்துக் கொண்டு, தன் நேரத்தை மற்ற கடமைகளுடன் சரி செய்து, பாடங்கள் அனைத்தையும் படிக்கும்படி அமைப்பது (**organisation**) அவனை முறையாகச் செயல்பட வைப்பதாகும்.



அதற்கு முன் அவனுடைய சக்தி (**force**) முழுவதும் படிப்பின் பக்கம் திருப்பப்பட்டால்தான் சக்தி படிப்புக்கு உதவும். சக்தியைக் (**force**) குறிப்பிட்ட பக்கம் திருப்பினால் அது **power** பலன் தரும் சக்தியாகிறது.

உடலிலும், மனத்திலும் தெம்பு **energy** இருந்தால்தான் அடிப்படையாகப் படிக்க முடியும். மேலும் படிக்க வேண்டும் என்ற கருத்து எண்ணமிருந்தால்தான் தெம்பு **energy** சேர்ந்து **force** பலன் தர முடியும். உடலுக்குத் தெம்பு கொடுப்பது உணவு. மனத்திற்குத் தெம்பு அளிப்பது ஆர்வம்.

படிப்பில் திறமை இருக்கிறது எனில் அது எழ நல்ல உணவு, படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அடிப்படை. அது தெம்பை (**energy**) உற்பத்தி செய்யும். படிப்பது அவசியம் என்ற நோக்கம் இருக்கும் தெம்பைப் படிப்புப் பக்கம் செலுத்தும்பொழுது அது **force** படிக்கக்கூடிய சக்தியாகிறது. தன்னையும், தன் சூழ்நிலையையும் **organise** முறைப்படுத்திக் கொண்டால் அந்தச் சக்தி **force,** படிப்பைத் தரும் சக்தியாக **power** ஆக மாறுகிறது. **Power** பலனைத் தருகிறது. இவை திறமையின் பகுதிகள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **energy** | ➠ | **force** | ➠ | **power** | ➠ | **capacity** |
| தெம்பு | ➠ | படிக்கக்கூடிய சக்தி | ➠ | பலன் தரும் சக்தி | ➠ | திறமை |

இவற்றிற்குத் தேவையானவை,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உணவு ஆர்வம் | ➠ | நோக்கம் | ➠ | முறைப்படுத்தும் சூழ்நிலை | ➠ | திறமை |

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் செய்யும் காரியங்களைக் கவனித்தால் நமக்குத் திறமையிருக்கிறதா, எப்படி அது வந்தது, திறமையில்லையா, எதனால் இல்லை என்று புரியும்.

**பயிற்சி பலன் தரும். அடுத்த பட்டம், உயர்ந்த அனுபவம், அடுத்த உயர்ந்த இலட்சியத்தை நாடுதல் மனித நிலையை உயர்த்தும்.**

❊ ❊ ❊

பயிற்சி என்பது தானே நெடுநாளில் நடக்கக் கூடியதைக் குறுகிய காலத்தில் பெற்றுத் தரக்கூடியது. தானே நடக்க முடியாததை, நடத்தித் தரவல்லதும் கூட. பெய்யும் மழை தானே ஏரியில் சேர்ந்து, பயிருக்கு வேண்டும்பொழுது கிடைக்கப்போவதில்லை. நாமே முயன்று ஏரியையும், வாய்க்காலையும் ஏற்படுத்தினால்தான் அது நடக்கும். சென்னையில் பேப்பர் போடும் பையன் தானே படிப்பும், பட்டமும் பெறப் போவதில்லை. அவனை எடுத்து பயிற்சி அளித்தால் நடக்கும். டெல்லியில் தங்கியிருந்தால் 2, 3 வருஷத்தில் ஹிந்தி பேச வரும். பாண்டியில் தங்கியுள்ள வடஇந்தியர் 10, 15 ஆண்டுகளில் தமிழ் கற்றுக் கொள்வதில்லை. பயிற்சியால் 10 மாதத்தில் கற்றுக் கொள்ளலாம்.

இதுவே குமாஸ்தாவுக்கும், அதிகாரிக்கும் உள்ள வித்தியாசம். குமாஸ்தாவுக்கு யாரும் பயிற்சி அளிப்பதில்லை. தானே **(rank promoted)** பயின்று 20 ஆண்டுகளில் மேலே வருவார்கள். அதிகாரி பயிற்சி மூலமாக முதல் ஆண்டு முடிவில் அதைப் பெறுகிறார்.

தானே கிடைக்காத பயிற்சியை நாமே பெறலாம். நாமே பெற அதிக ஆர்வம், உயர்ந்த முயற்சி வேண்டும். கல்லூரிக்குப் போகாதவன், தானே அறிவு பெற எடுக்கும் முயற்சி பெரிது. தானே பட்டம் பெற எடுக்கும் முயற்சியும் சிரமமானது.

வீட்டில் கற்றுக் கொடுக்காத நல்ல பழக்கங்களை நாமே முயன்று பெறலாம். பிறவியில் இல்லாத நல்ல சுபாவத்தைப் பெறுவது பூரண யோகம். முயற்சி மேலே போகப் போக அதிகம் தேவைப்படும். **physical skill** கைவினை எளிது. பழக்கம் அடுத்தது. படிப்பு உயர்ந்தது. இலட்சியம் அதற்கும் அடுத்தது. சுபாவம் கடைசியானது.



| நிலை | - முயலும் பகுதி | - முயல்வது |
|---|---|---|
| **Physical skill**, கைவினை | - உடல் | - உழைப்பு |
| நல்ல பழக்கம் | - உயிர்(பிராணன்) | - மன உறுதி |
| அறிவு | - மனம் | - புத்தி |
| இலட்சியம் | - உயர்ந்த மனம் | - **Mental decision** மனத்தின் முடிவு |
| சுபாவம் | - சைத்தியபுருஷன் | - சமர்ப்பணம் |

**புதியதாக ஒரு நல்ல குணத்தை ஏற்றுக்கொள். உதாரணமாக இனிமையான உணர்வை உண்மையான புன்னகையால் வெளிப்படுத்த முயலலாம்.**

❊ ❊ ❊

விஞ்ஞான ஆராய்ச்சி **biology** உடல் நூலில் முதிர்ந்து, அது உள நூலைத் **psychology** தொடும் இடத்தில் நடந்த பல ஆராய்ச்சியின் முடிவுகளில் ஒன்று: புன்னகை இன உணர்வை வெளிப்படுத்துகிறது.

விலங்கினம் பெட்டையைத் தேடும் பொழுது **(mating call)** குரல் கொடுக்கும். நாகரீகம் வளர்ந்து இக்குரல் புன்னகையாயிற்று என்பது ஆராய்ச்சி.

ஆன்மீக ரீதியாக ஆன்மா மலரும்பொழுது முகத்தில் அது புன்னகையாக வெளி வருகிறது. சிரித்த முகமாகவே உள்ளவர் பலர், சிரித்தறியாதவர் சிலர். ஒருவரைக் காணும்பொழுது உளம் நிறைந்து, அகம் மலர்ந்து, உள்ளம் பூரித்து, அவரை நாம் கண்டதால் மகிழ்ந்தோம் என அறிவிக்கும் புன்னகையை எவர் ஏற்றாலும், அது ஆன்மாவின் மலர்ச்சிக்கு உதவும்.

ஒரு புத்தகம் கடன் வாங்க ஒருவர் வருகிறார். நாம் அதைக் கொடுக்கிறோம். வாங்கிக் கொண்டு, நிமிர்ந்து பார்க்காமல் போய் வருகிறேன் என்றும் சொல்லாமல் போய் விடுகிறார். இவர் **thank you** என்று சொல்லப் பழகினால் இவருக்கு இது முன்னேற்றம்.

அழையாத வீட்டிற்குப் போய், அதை அனுதினமும் செய்து, வாராதே என்று அவர்கள் சொல்லும்வரை போகிறவர் "மதியாதார் தலைவாசல்" மிதிக்க மாட்டேன் என்ற பழக்கத்தை மேற்கொள்ளுதல் பலன் தரும்.

பரீட்சைக்குப் போகும் மாணவன் இதுவரை தன்னிடமில்லாத ஒரு நல்ல பழக்கத்தை மேற்கொண்டு முதல் நாளே ஹால்டிக்கெட், பேனா, ஸ்கேல், நோட்ஸ் இவற்றை எடுத்து வைத்து, செருப்பு, சைக்கிளுக்கு ரிப்பேரிருந்தால் ரிப்பேர் செய்தால், அது நல்லது.

வீட்டிற்கு வந்த விருந்தாளியை மறந்து சாப்பிட உட்கார்ந்த பின், நீங்களும் சாப்பிட வாருங்கள் என்று கூப்பிடுபவர், வந்தவர்களை முதலில் சாப்பிடச் சொல்லும் பழக்கத்தை எடுத்துக் கொள்ளலாம்.

தனியாக உட்கார்ந்திருக்கும் பொழுது, தம் பெருமை, தமக்கு உலகம் இழைத்த கொடுமை, தம் குடும்பம் தம்மை அலட்சியம் செய்தது, தம் நண்பர்கள் செய்த துரோகம் ஆகியவற்றை நினைவு கூர்பவர், எப்பொழுதும் தம்மையே நினைத்துக் கொண்டிருக்கும் சுயநலமி என்பதால் இனி தனியே இருக்கும் பொழுது தம் சம்பந்தப்பட்டவற்றை நினைப்பதில்லை என்று முடிவு செய்தால் நல்லது.

எத்தனையோ வீடுகளில் - நம் வீடும் அதனுள் அடங்கலாம் - காப்பி சாப்பிட்ட டம்ளரை உடனே கழுவினால் அது புதிய நல்ல பழக்கமாகும்.

பிறர் கூறுவதை மறுத்துப் பேசாமலிருப்பது நல்லது. மனத்தால் மறுத்து நினைக்காமலிருப்பது உத்தமம்.



**காலைக் கடன், எழுத்து, பேச்சு போன்ற வழக்கமான செயல்கள் செய்வதைச் சற்றுத் துரிதப்படுத்து.**

* * *

இதைச் செய்தால் முழுச் சோம்பேறியும், சுறுசுறுப்பாகி விடுவான். எவரும் தம்மை சுறுசுறுப்பாக்கிக் கொள்ளும் முறை இது. வழக்கமாக ஆபீஸுக்குப் போய்ச் சேர 9 நிமிஷம் ஆகும் என்பவர் அதை 8 நிமிஷமாகவோ, 8½ நிமிஷமாகவோ - அவசரப்படாமல் - மாற்ற முயன்றால் அது 5 நிமிஷமாகும். தினசரி 5 மணிக்கு முடியும் ஆபீஸ் வேலை 3¾ க்குத் தானே முடிவதைக் காணலாம். செய்யும் வேலை சற்றுச் சிறப்பாக இருக்கும். அதிகமாக எழுத்து வேலையுள்ளவர்கள் ஒரு பக்கம் எழுத எத்தனை நிமிஷமாகிறது என்று கண்டால், அது 37 நிமிஷமானால், அதை 34 நிமிஷமாக்க வேண்டும் என்று முடிவு செய்து பல நாள் முயன்ற பிறகு கணக்குப் பார்த்தால் அது 23 நிமிஷமாகியிருக்கும். இச் சுறுசுறுப்பு எல்லாக் காரியங்களிலும் சற்றுத் தெரியும்.

நம் அன்றாட வேலைகள் அனைத்தையும் இதுபோல் சுறுசுறுப்பாக்கினால் பிரமோஷன் வரும், தற்செயலாக வீடு மாறி பெரிய இடம் அமையும், நம்மை விட உயர்ந்தவர்கள் நண்பராவார்கள், வாழ்க்கை ஒரு சிறிது உயரும்.

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒன்று. சுறுசுறுப்பு வேறு, அவசரம் வேறு. சுறுசுறுப்பு வேலையைச் சீக்கிரம் முடிக்கும். அவசரம் வேலையை நடக்க விடாது. சுறுசுறுப்பு திறனை வளர்க்கும். அவசரம் திறமையைக் குறைக்கும். இந்தத் தவறு செய்தல் கூடாது. **(dynamic people are serious; silly people hurry)**

பெண்கள் இம்முறையை மேற் கொண்டால் சமையல் சீக்கிரம் முடியும். சமையல் வழக்கத்தைவிட ருசியாக இருக்கும். வீட்டில் தனியாக இருப்பது எரிச்சலாக இருக்கிறது என்பவர்கட்கு, எரிச்சல் குறையும்.

வந்த விருந்தினர்கள் வீட்டுப் பெண்மணிக்கு உதவி செய்ய ஆரம்பித்து, தினமும் சமையல் மற்ற வேலைகளைச் செய்து 9½ மணிக்கு முடித்தனர். ஆயாசமாகி விடும் அவர்கட்கு. இரு நாள் கழித்து வீட்டுப் பெண்மணி அதைச் செய்தார். 8½ மணிக்கு முடிந்தது. எல்லா வேலைகளும் எப்படி 1 மணி முன்னதாக உங்களால் செய்ய முடிகிறது? என்று அவர்கள் நினைத்தனர். மனம் செயலில் ஈடுபட்டால் காரியம் சீக்கிரம் நடக்கும், சிறப்பாக நடக்கும். மனமும் அமைதியுறும். **It needs increased concentration**. செயலில் மனம் லயித்தால் வேலை சீக்கிரம் முடியும்.

**சிறு வயதிலிருந்து அளவை மீறிப் போய் பிரச்சினையை வளர்ப்பது உனது பழக்கமானால், அளவோடு பழகி, அளவுகடந்த பலன் பெறலாம்.**

❋ ❋ ❋

செயல் தெம்பு உள்ளவரை நீடிக்கும். அளவை ஏற்படுத்துவது மனம். பேசும்பொழுது, அளவு மீறினால் சண்டை வரும். ஆனால் பேசத் தெம்பு இருக்கும்வரை பேச்சு எழும். அதை மனம்தான் தடுக்க முடியும். சாப்பாடு நன்றாக இருந்தால் ருசி தொடர்ந்து சாப்பிடச் சொல்லும், ஆசையுள்ளவரை சாப்பிடலாம். அது பிரச்சினையை ஏற்படுத்தும். மனம் குறுக்கிட்டு ஆசையைத் தடுக்க வேண்டும்.

சிறு பிள்ளைகள் லீவு நாளில் காலையிலிருந்து மாலைவரை விளையாடிவிட்டு அடுத்த நாள் எழுந்திருக்க முடியாமல் சிரமப்படுவதுண்டு.

இது போன்ற நிலை சிலருக்குத் தானிருக்கும். இவர்கள் ஆரம்பநிலை (**elementary level**) வளர்ச்சியிலிருப்பவர்கள். இவர்கள் வாழ்வு மிக எளியதாக இருக்கும். இவர்களுக்கு மனம் வளர்ந்திருக்காது. மனவளர்ச்சியைப் பயிற்சியால் பழக்கமாகப் பெறலாம். பெற்றால் வளர்ச்சி அதிகமாகும்.



இப்படிப்பட்டவர்கள் சிறு தொழில் செய்து கொண்டிருப்பார்கள். நல்ல தொழிலிலிருந்தால் தாழ்ந்த நிலையிலிருப்பார்கள். பயிற்சியால் சுயக்கட்டுப்பாட்டைப் பெற்றால் சிறு தொழிலிலிருந்து நல்ல நிலைக்கு வருவார்கள். நல்ல தொழிலில் தாழ்ந்த நிலையிலிருந்தால் உயர்ந்த நிலைக்கு வருவார்கள். பெட்டிக் கடைக்காரன் நகைக் கடை வைத்தது போன்ற மாற்றம் ஏற்படும். முன்சீப் கோர்ட் வக்கீல் ஹைகோர்ட் வக்கீலானது போலிருக்கும். நெடுநாள் தொண்டன் **MP** ஆனதுபோல் மாறும்.

எப்படி இது முடியும் எனலாம்?

சமூகம் வளர்ந்துவிட்டதால், நாம் சமூகத்தில் நல்ல நிலைமைக்கு நம் திறமையால் உயர்ந்தவரானாலும், கட்டுப்பாடில்லாததால், கீழ் மட்டத்திலிருக்கிறோம். திறமையும், தகுதியும் இல்லாதவருக்கு இந்த வாய்ப்பில்லை. திறமையும், தகுதியும் இருந்தும் மட்டமான பழக்கத்தால் தாழ்ந்த நிலையிலிருக்கிறோம். வளர்ச்சியடையாத சமூகத்தில் இந்த வாய்ப்பில்லை. வளர்ந்த சமூகம் நாம் மாறினால் நம்மை ஆதரிக்கத் தயாராக இருக்கிறது. எனவே நாம் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டால், நமக்குரியது வந்துவிடும்.

இதுபோல் அடிமட்டத்திலிருந்து உயர் மட்டத்திற்கு வந்தவருண்டு. ஆனால் அதிகம் பேரில்லை. இத்தெளிவை உலகம் அறிந்து முனைந்தால் முனைபவர் அனைவரும் பலன் பெறமுடியும். அந்நோக்கத்தோடு நான் இந்நூலை எழுத ஆரம்பித்தேன்.

**பிறரைப் புண்படுத்தி வேலையைக் கெடுக்கும் பழக்கம் உடையவர், பயிற்சியால் அப்பழக்கத்தை மாற்றிக் கொள்ளலாம்.**

❋ ❋ ❋

**எவரும் வேலை செய்யக்கூடாது என்பதே உனது இலட்சியமானால், அந்த இலட்சியம் உனக்குத் தாழ்வு மனப்பான்மையால் ஏற்பட்டிருந்தால், தினமும் 19 மணி நேரம் வேலை செய்யும்படிப் பயிற்சியால் மாறலாம்.**

❊ ❊ ❊

பட்டம் பெற்றபின் தாம் பிறந்த சூழ்நிலையைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல், தகப்பனார், தாயார் பிறர் வீட்டு வேலைகள் செய்ததை நினைத்து மனம் புண்பட்டு, "எவரும் வேலை செய்யக் கூடாது" என்ற கருத்தை ஆழ்ந்து மனத்தில் இருத்திக் கொண்டார் ஒருவர். தம் எண்ணத்தைப் பரிசீலனை செய்யும் நேரம் வந்தது. மனத்தை மாற்ற படிப்பையும், பயிற்சியையும் ஏற்றுக் கொண்டார். பலன் கிடைத்தது. தாமே முன் வந்து அதிக நேரம் வேலை செய்யும் வாய்ப்பை கேட்டுப் பெற்றார். தினமும் 19 மணி வேலை செய்தார். வேலை சிறப்பாகச் செய்வதில் உயர்வு பெற்றார்.

தாழ்வு மனப்பான்மையால் வந்தது, எப்படிப் போகும் என்பதில்லை. அறிவை விசாலப்படுத்திக் கொண்டால், தாழ்வு மனப்பான்மையின் அஸ்திவாரம் போய்விடும். அதைச் செய்யும் முன் பயிற்சி பலிக்காது. அதன்பின் வேலையைத் தானே செய்து, வேலையை ஆனந்தமாகக் காண முயல்வதே பயிற்சி. அதைக் கண்டபின் பழைய "இலட்சியம்" மறந்து போகும். சிறப்பு வெளிவரும்.

பிறரைப் புண்படுத்துபவர், தம்மை விடப் பண்புள்ளவரிடையே வாழும் பொழுது காலம் தள்ள முடியும். தம்மையொத்தவருடனிருந்தால், ஓயாமல் சண்டை வரும். தனக்கும் குறைந்த பண்புள்ளவரிடையே வாழ்ந்தால், இவரைச் சண்டை போடவே அனுமதிக்க மாட்டார்கள். ஒரேயடியாக மண்டையில் அடித்து மட்டம் தட்டி ஒரு முறையும் வாயைத் திறக்க முடியாதபடிச் செய்துவிடுவார்கள்.

அவர் பழக்கத்தை விட முயன்று பயிற்சி பெற விரும்பினால் தாமே தமக்கு அப் பயிற்சியை அளித்துக் கொள்ள வேண்டும்.



தம்மையும், தம் போலில்லாதவரையும் கவனிக்க வேண்டும். புண்படப் பேசுவது ஒரு பழக்கமா, நம்பிக்கையா, கட்டுமீறி எழும் சுபாவமா என்று புரிந்து கொள்ள வேண்டும். நம்பிக்கையானால், மாற்றிக் கொள்ள வேண்டும். பழக்கமானால், எதிரான பழக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். சுபாவம் மாறாது. சுபாவம் மாற வேண்டுமானால் அன்னைக்குப் பிரார்த்திக்க வேண்டும்.

**உன் சிறந்த திறமையை இருமடங்காக்கலாம். அடுத்த கட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அந்த உண்மை விளங்கும்.**

காலம் மாறும் பொழுது நடைமுறை மாறுகிறது. 5 அல்லது 10 வருஷம் கழித்துப் பார்த்தால், பழைய டிரஸ், சாப்பாடு, வீட்டமைப்பு **(home-setting)**, கடையில் விற்பனை தோரணை **(display),** விசேஷங்களுடைய தரம், ஆகியவை அளவுகடந்து உயர்ந்துவிட்டது, மீண்டும் பழையபடி நம்மாலிருக்க முடியாது என்று அறிகிறோம். புத்தகம் அச்சிடுவது, திருமண அழைப்பிதழ் முதற்கொண்டு தரமாக மாறி விடுகின்றன.

காலம் அடுத்த கட்டத்தைச் சேர்ந்ததால் இந்த மாற்றம். இன்று நாம் ஒரு ஆபீசிலிருக்கிறோம். வீட்டில் குடியிருக்கிறோம், தொழிலில் ஒரு சிறப்பைப் பெற்றுள்ளோம். இவற்றை நாம் அதிகபட்சக் கவனத்தோடு திறமையாகச் செய்துள்ளோம் எனில், அடுத்த கட்ட உயர்வைச் சேர்ந்தவர்களை இன்று கவனித்தால் நம்மைப்போல் இருமடங்கு உயர்வாக இருப்பார்கள். நம் நிலையிலிருந்து பார்த்தால் எது உயர்வாகத் தெரிகிறதோ, அது அடுத்த கட்டத்தில் பாதி என்பதால் நாமும் அந்த உயர்வைப் பெறலாம்.

தமிழ் மீடியம் 8வது மாணவன் சிறப்பானால், இங்கிலீஷ் மீடியம் 8வது மாணவனுடைய திறமை அதிகமாக இருக்கும். பாடங்களைப் பொருத்தவரை தமிழ் மீடியம் மாணவன் அந்தச் சிறப்பைப் பெற முடியும்.

பழைய விவசாயத்தில், முதன்மையானவர் புது விவசாயத்தில் பாதிப் பலனைத்தான் எடுப்பார். முன்சீப் கோர்ட்டில் திறமைசாலி எனப் பெயர் வாங்கியவர் - குமாஸ்தா, சிரஸ்தார், நாஜர் - ஜில்லா கோர்ட், ஹைகோர்ட்டில் உள்ள அதே உத்தியோகம் செய்பவர்களுடைய திறமையை எட்ட இருமடங்கு உயர வேண்டும்.

போட்டோ எடுப்பது, மேடைப் பேச்சு, டைப் அடிப்பது, விசேஷங்களை ஏற்பாடு செய்வது, எலக்ஷன் நடத்துவது, சமையல் செய்வது போன்ற எந்த வேலையிலும் சிலர் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பெருந் திறன் பெற்றிருப்பார்கள். அதையும் 100% உயர்த்த முடியும்.

முன்னேற்றத்திற்கு முடிவில்லை. வேலை பல கட்டங்களாகப் பிரிகிறது. நாம் ஒரு கட்டத்திற்குள் உள்ள முன்னேற்றத்தை எட்டி விடுகிறோம். அத்துடன் திருப்தியடைகிறோம். அடுத்த கட்டம் ஒன்று அதற்கு மேலிருப்பதால், முன்னேற்றம் முடிவற்றதாகும்.

ஜில்லா ஸ்போர்ட்ஸ்க்கும், மாநில ஸ்போர்ட்ஸுக்கும் உள்ள வித்தியாசம் இது.

**செல்லம் கொடுத்து சுத்தமாக வீணாகப் போன குழந்தையானால், உன்னால் உன் வேலைகளையே செய்ய முடியாத அளவுக்கு வந்துவிட்டால், ஓர் அம்சத்தில் தீவிர முடிவெடுத்து அனைவரும் போற்றும் அளவுக்கு மாற முடியும்.**

❊ ❊ ❊

செல்லம் கொடுத்தால் மட்டமான சூழ்நிலையில் குழந்தை வீணாகப் போகும். நல்ல சூழ்நிலையில் குழந்தையின் உள்ளே மறைந்துள்ள அனைத்துத் திறமைகளும் வெளிவரும் என்பது சட்டம். வீணாகப் போன குழந்தையின் வாழ்விலும் ஓரளவு மறைந்துள்ள திறமைகள் மலர்ந்திருக்கும். அதை எவரும் கவனிக்க மாட்டார்கள்.



15 அல்லது 18 வயதான பின் குழந்தையால் தன் வேலைகளைக் கூடச் செய்து கொள்ள முடியாத நிலைக்கு வந்த பின், அதைக் கவனித்தால் எந்த நல்ல அம்சம் இருக்கிறது என்று தெரியும். ஏதேனும் ஒன்றிருந்தால், அதைத் தீவிரமாகப் பயன்படுத்த இப்பொழுது குழந்தை முடிவு செய்தால், மாற்றம் ஏற்படும்.

15 வயதுவரை காலையில் எழுந்து சாப்பிடுவதற்கு "முடியாத" குழந்தை, மாதம் 10 நாள் பள்ளிக்கூடம் லேட்டாகப் போகும். **Home work** எழுதும் பழக்கமே இல்லை. தினமும் ஒரு புஸ்தகமோ, நோட்டோ மறந்துவிடும். ஆனால் இனிமையாகப் பழகும். பிறர் மீது பாசமாக இருக்கும். தன் குறையை அறிந்த குழந்தை, "என்னால் காலையில் எழுந்திருக்க முடியாது, பள்ளிக்கூடம் போக முடியாது, வீட்டில் பாடம் எழுத முடியாது, ஆனால் மற்றவரிடம் அன்பாகப் பழக முடியும். ஆதலால் அதையாவது முறையாக, முழுமையாகச் செய்கிறேன்" என்று எடுத்த முடிவு அக்குழந்தைக்குப் பலன் தந்தது.

எல்லா ஆசிரியர்களும் இக் குழந்தையைப்போல் இப்பள்ளிக்கு 20 வருஷமாக ஒரு குழந்தை வரவில்லை. இது போன்று ஒரு குழந்தையை உற்பத்தி செய்தால் பள்ளி கட்டியதன் இலட்சியம் பூர்த்தியாகிறது என்றனர். எப்படி இக்குழந்தை இவ்வளவு உயர்ந்த முறையில் பழக முடிகிறது என்ற ஆராய்ச்சி பலர் மனதில் எழுந்தது.

முடிவு தீவிரமானால், அதன் மூலம் பெரிய குறையையும் நிறைவாக்க முடியும்.

**உனக்குள்பட, நீ அனைவருக்கும் ஒரு தொல்லையாகி விட்டிருந்தால், சற்று மனதைக் கவனித்து, மாற முயன்றால், அனைவரிடமும் நல்ல பெயரெடுக்கும் அளவுக்கு மாறலாம்.**

❊ ❊ ❊

**சுடு சொல் சொல்வதையே பழக்கமாகவும், அதை ஒரு ஆயுதமாகவும் கொண்டு நீ இதுவரை வளர்ந்திருந்தால், அதை மாற்ற வேண்டும் என்ற முடிவு உன் வாழ்வைத் தலை கீழே மாற்றி, இனிமையானவன் என்று பெயர் பெற முடியும்.**

❋ ❋ ❋

**நீ கேட்கும் சொற்பொழிவுகள், படிக்கும் புத்தகங்களிலி ருந்து ஒரு நல்ல கருத்தைக் குறித்து வைத்துக் கொள். அதைப் பின்பற்று.**

தொடரும்.

❋ ❋ ❋

## ஜீவிய மணி

ஞானத்தின் விளைச்சலை அறுவடை செய்ய முன்வருவது பகுத்தறிவு.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிறரை ஆளப் போராடும் மனிதன், பல ஆண்டுகள் உலகில் செயல்படுகிறான், அகத்துள் சென்று எண்ணத்தையும், ஆசையையும் அடக்கப் பாடுபட்டால், சுலபமாகச் சீக்கிரம் அவன் எண்ணம் நிறைவேறும்.





# இறைவன் வரும் தருணம் 2000 AD

கர்மயோகி

ஆண்டுதோறும் **Nov.** 14, நேரு பிறந்ததினத்தன்று அவர் நினைவு சொற்போழிவு நடைபெறும். இந்த ஆண்டு அச்சொற்பொழிவுக்குரிய கருத்துகள் எவை என சிந்தித்தேன். என்றும் இவை நாட்டிற்குப் பொருந்தும் என்றாலும், அதை வெளியிட உரிய நேரம் இது என்று நான் கருதுகிறேன்,

பொழுது விடிவது மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு ஆகிய நேரம் உலகில் அதிக சக்தி எழும் நேரம். ஜனவரி 1-ஆம் தேதி நூறாண்டும், அடுத்த ஆயிரமாண்டும் **(millennium)** பிறக்கும் தருணம். அதனால் உலகில் அபரிமிதமான சக்தி உலவும் நேரம். உலகுக்கு அது இறைவன் வரும் தருணமாகும்.

நாடு உலகப்பட்டியலில் 134ஆம் நிலையிலுள்ளது. 5 ஆண்டுகளில் இதை 50ஆம் நிலைக்கு கொண்டு வரமுடியும் என்ற கருத்தை இன்று நாட்டில் பிரபலமானவர்கள் கூறுகிறார்கள். அது உண்மை. இன்று நாம் பின்பற்றும் முறைகள் சர்க்கார் மக்கள் முன்னேற்றத்திற்காக உழைப்பது, வெளிநாட்டு உதவியை ஏற்பது, பாக்கிஸ்தானுடன் பிணக்கு, ஜனநாயக முறையின் மெதுவான போக்கை ஏற்பது, சுயநலம் பொதுவாழ்வில் பெரும்பலனடைவது, விருதுகளளிப்பது, விழாக் கொண்டாடுவது ஆகியவை. இத்தனையையும் நேர் எதிராக மாற்றினால், நாட்டிற்கு வேண்டிய அத்தனை திட்டங்களுக்கும் நாமே பணத்தை உள்நாட்டில் உற்பத்திசெய்யும் முறைகளை ஏற்றால், அதற்குரிய மக்கள் செயல்படும் முறைகளை கைக்கொண்டால், 5 ஆண்டில் 134ஆம் நிலையிலிருந்து 50ஆம்

நிலைக்கு வரும் என்பது திண்ணம். அதை நிறைவேற்றும் கருத்துகள்:-

- நாடு 50ஆம் நிலையை அடைய தேவையான எல்லா திட்டங்களும் நம்மிடம் இருப்பதை ஏற்று, அதற்குரிய மூலதனத்தை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முன்வர வேண்டும்.
- வெளிநாட்டு பணஉதவியை ஏற்றால் நாடு பலஹீனமடைவதால் இனி அதை மறுக்க முடிவு செய்ய வேண்டும். அறவே மறுக்க வேண்டியது அவசியம்.
- உள்நாட்டு மூலதனமும், உள்நாட்டு திட்டமும் நிறைவேற வேண்டி **organisation** நிர்வாகத்தை அகில இந்திய அளவில் சர்க்கார் தலையீடின்றி ஏற்படுத்த வேண்டும்.
- **Must declare an administrative emergency for 5 years.** அடுத்த 5 ஆண்டிற்கு நிர்வாகத்திற்கான அவசரச்சட்டத்தை பிரகடனப்படுத்த வேண்டும்
- பாக்கிஸ்தான், பங்களாதேஷுடன் பொருளாதார ஒப்பந்தம் செய்து இருநாடுகளும் முன்னேற - ஒருநாடு ஆலையும், அடுத்தது கச்சாப்பொருளும் தர ஏற்பாடு 50 தொழில்களில் ஏற்படுத்த வேண்டும் - திட்டம் தீட்ட வேண்டும்.
- அபிவிருத்தி திட்டங்கள் நிறைவேறும்வரை விருதுகள் தருவது நிறுத்தப்படவேண்டும்.

**சுய ஆதரவு (self-reliance), அவசரச் சட்டம் (emergency) நிர்வாகத் திறமை (organisational efficiency) ஆகியவை நாட்டை உயர்த்தும். இறைவன் வரும் தருணம் இவற்றை நிறைவேற்றும்.**

❉ ❉ ❉



# புதுவருட செய்தி

*தன்னை முழுவதுமாக பிறர் சேவைக்கு அர்ப்பணிக்க தீவிர ஆர்வம் கொண்டு, அது பிறருக்குத் தெரியாத அளவுக்கு நடந்துகொள்வது அடக்கத்தின் ஒரு சின்னம்.*

*''சேவை பழுத்து அடிமையின் சிகரமாகி ஜீவன் வாழ்வில் கரைய தயாராக இரு. செயலாலோ, சொல்லாலோ, முகக்குறியாலோ உன் மனநிலை மற்றவர்களுக்கு தெரியவில்லை என்றால் சேவை அடக்கமாகிவிடும்''.*

*உயர்ந்த பூரண தியாகத்தை உலகம் அறியாதபடி செய்ய முடிவதே அடக்கம் அன்பாகும் அமரநிலை.*

**Total willingness and readiness to dissolve oneself in the service of others, becomes true humility of the highest type when the eagerness to serve does not bring out the least shadow of ego by its expression.**

**"Be most ready to serve but do not let the world know of your readiness. Deliver when sought for".**

# லைப் டிவைன்

கர்மயோகி

## VII. அகங்காரம் - இன்பதுன்பம்

சிருஷ்டியே சச்சிதானந்தமெனில், துன்பத்திற்கும், தீமைக்கும் இடம் ஏது? பூரணமான சச்சிதானந்தம், ஒரு வேளை பூரணத்திலிருந்து வழுவினால் அவை ஏற்பட வழியுண்டு. ஆதாம், ஏவாள் என பைபிள் கதை கூறுவது அதையேயாகும்.

புனிதமான இறைவனை மனிதன் பூரணமாக ஏற்கவேண்டும். ஏற்பதில் குறையிருந்தால் பூரணம் குறையுள்ளதாகிறது. குறை ஏற்பட்டபின் இன்பம், துன்பம் என்ற இரு நிலை ஏற்படுகிறது. நாம் புருஷன், பிரகிருதி என்பதை பைபிள் ஆதாம், ஏவாள் என்கிறது. கூடாது என்பதை ஆதாம் செய்ததால் பாவம் ஏற்பட்டது. பிரபஞ்சத்தின் பகுதியான மனிதன் இன்று தன் ஆதியான பிரபஞ்சத்தை மறந்துவிட்டான். அவன் வாழும் இந்த ஜட உலகிலும் ஆன்மாவுண்டு. இன்று மனிதன் அதை அறிய முடியவில்லை. அதை அறிந்தால் இன்பதுன்பமெனும் இருநிலை மாறி, முழுவதும் இன்பமாகும்.

கூடாது என்ற பழம் பாவத்திலாழ்த்தியதுபோல், தெய்வீக வாழ்வு எனும் மரத்தின் பழம் - பலன் - மனிதனுக்காகக் காத்திருக்கிறது. அதைச் சாப்பிடும் மனிதன் தெய்வமாவான். அது நிலையை மாற்ற வல்லது. இருநிலை - இன்பம், துன்பம் - மனிதனுக்குரியது. முழு நிலை - இன்பம் மட்டுமுள்ள நிலை - தெய்வத்திற்குரியது.

சிருஷ்டியின் முழுமையாக நாம் சச்சிதானந்தத்தை அறியமுடியும். பிரபஞ்சம் முழுவதும் சச்சிதானந்தம் பரவுவதை நாம் காணலாம். சச்சிதானந்தம் சிருஷ்டியாக மாறும்பொழுது ஓர் இருளாகிறது. இருள்



மரணம், துன்பம், தீமையாகின்றது. நம் உணர்ச்சி அவற்றை வெறுக்கின்றது. சிருஷ்டியாக சச்சிதானந்தம் மாறும்பொழுது முழுமையான ஜோதி, பகுதியான இருளாகிறது. ஒன்று பலவாக மாறுகிறது. அறிவான ஒளி குழப்பமாகிறது. இசைக் கச்சேரியின் முழுமையை தனிவாத்யங்கள் பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு வாத்யக்காரரும் தனித் தனியே இசைக்க முயல்வதுபோல் உலகம் காட்சியளிக்கிறது. நாம் மீண்டும் முழுமையை நாட முடியும். அதைச் செய்தால் பிணக்கு - அபஸ்வரம் - சுமுகமாகும், கச்சேரி சிறக்கும். சிருஷ்டியின் ஒரு பகுதியிலும் இதைச் செய்யலாம். ஜடத்திலும் இது முடியும். ஜடம் எதையும் கண்டுகொள்வதில்லை. இருந்தாலும் இதுவே உண்மை. சச்சிதானந்தம் ரூபங்களைக் கடந்தது. இரு நிலைகள் நமக்குரியன. சச்சிதானந்தம் இருநிலைகளை அனுமதிக்காது. துரிய நிலை திருவுருமாற்றும். அரைகுறையான சமரசம் அதற்குதவாது. எதிரானதை தனக்குரியதாக மாற்றவல்லது. அதனால் முரண்பாடழியும். திருவுருமாற்றம் பிணக்கையும், எதிர்ப்பையும், முரண்பாட்டையும் அழிக்கும்.

மனிதனைப் பிரபஞ்சத்தின் கோணத்தில் அறிய முயலுவோம். நாம் உலகை நம் கண்ணோட்டத்தில் அறிகிறோம். நம் மனநிலைக்கு அது பொருந்தும். இதுவே முடிவானதில்லை, முழுமையானதுமில்லை. இதுமட்டும் சரி எனவோ, முடிவு என்றோ நாம் கூறமுடியாது. மனம் மனிதனுடையது. அவன் அனுபவத்தை, அவன் நோக்கம், அவன் கண்ணோட்டத்தில் அறிகிறது. இல்லை எனில் எழும் பிரச்சினை தீராது. நம் புலன்களால், புலனறிவால் நாம் உலகை அறிவோம். மனிதனுடைய புலனிலிருந்து மாறுபட்ட புலன்களுண்டு. அவற்றின் திறன் மாறுபட்டது. அவை உலகை அதிகமாக அறிகின்றன. அவர்களுடைய பார்வை உயர்ந்தது. மாறுபட்ட பார்வையுமாகும். அவை மாறுபட்ட மனத்தின் கூறுகளாகும். அவை சத்தியஜீவிய மனநிலை என்பதால், நம் மனநிலையை விட உயர்ந்ததாகும். நம் ஜீவியம் மட்டும் உலகுக்குரியதில்லை. சத்தியஜீவியப் பார்வைக்கு உலகம் மாறுபட்டுத் தெரியும். மரணத்தை நாம் மரணமாக அறியும்பொழுது,

சத்திய ஜீவியம் மாற்றமாகக் காண்கிறது. மரணமில்லா வாழ்வின் மாறிய நிலையாக மரணத்தை சத்தியஜீவியம் உணர்கிறது. வலி என்று மனிதன் அவதிப்படுவது அதற்கு ஆனந்தமாகும். ஆனந்தம் திசைமாறி கடுமையடைந்தால் வலியாகிறது என்பது சத்தியஜீவியத்தின் உணர்வு. நமக்குத் தடை என்பது தடையாகும். சத்தியஜீவிய நோக்கம் வேறு. அதன் பார்வையில் தடை அனந்தனை வர்ணிப்பதாகும். தடை தடம் மாறிய அனந்தனாகும். அனந்தம் அந்தமும், ஆதியுமில்லாதவன். அந்தமும் ஆதியுமில்லாத அனந்தன், தன்னைத்தானே சுருக்கிக் கொள்வதை சத்தியஜீவியம் தடை என்கிறது. தீமை நமக்குப் பொல்லாதது. சத்தியஜீவியம் தீமையை நன்கு என்று காண்கிறது. நல்லது சிறந்து, தன்னைத்தானே வலம் வருவதாக தீமை தன்னை சத்தியஜீவியத்திற்கு உணர்த்துகிறது. நமக்குப் பூத்துக் குலுங்கும் பூங்கா உயர்ந்தது. நாம் நல்லது என்பதை அதைப்போல் நினைக்கிறோம். பூங்கா பூத்தபின் தன்னைப் பாதுகாக்க தன்னைச் சுற்றி முள் நிறைந்த வேலியை ஏற்படுத்தி தன்னைப் பாதுகாப்பதுபோல், நல்லது வளர்ந்தபின் தன் சிறப்பைப் பாதுகாக்க தன் உயர்ந்த திறமையால் தன்னைப் பாதுகாப்பதை நாம் தீமை என அறிகிறோம். கற்புக்கரசியின் கனலான கோபம் கற்பைப் பாதுகாப்பதைப்போல் தீமை நன்மையைப் பாதுகாக்கிறது. இது வறண்ட தத்துவமில்லை. சத்தியஜீவிய விழிப்புள்ளவர் காணும் உண்மையிது. அது பெரிய ஆத்மானுபவம். மனிதன் பூரணம் பெற அந்நிலைகளை எய்த வேண்டும். தனிமனிதனுக்கு முக்கியமாக வேண்டியது அது.

உலகின் உண்மைகள் எவரும் அறியக்கூடியதாகும். அன்றாட வாழ்வின் சட்டங்கள் அவை. நம் புலன்கள் நமக்கு அவற்றை உணர்த்துகின்றன. இரண்டாகப் பிரிந்து - இன்ப துன்பம் - இருநிலைகளாக அவை எழுகின்றன. சத்தியத்தின் நடைமுறை உருவங்களாக அவையுள்ளன. விசாலமான, முழுமையான சுமுகம் நாம் நாடுவது. அது நம் புலன்களில் நுழைந்து நம்மைத் திருவுருமாற்ற வல்லவை. மாறும்வரை பழைய மனநிலையைப் பின்பற்றுவதே சரி.



உயர்ந்த ஞானம் உண்டு. பழைய புலன் உணர்வுகளை உயர்ந்த ஞானம் நமக்கு விளக்கி உணர்த்தவல்லது. பழைய தோற்றத்தின் உள்ளுறை ஞானவித்தை எடுத்து உயர்ந்த ஞானம் நமக்குப் புரிய வைக்கும். அதுவே புதிய நிலை. பழைய உணர்வுகள் புதிய ஞானத்தால் விரிந்து மலரும். ஞானம் முதிரும் முன் புலனை மாற்ற முயல்வது சரியன்று. நடைமுறைக்கு அது சரிவராது. முறையான, கட்டுப்பாட்டின் அறிவு அதற்கு கட்டுப்படாது. உலகின் நடைமுறை தனக்கேயுரிய சட்டத்தைப் பின்பற்றுகிறது. அகந்தைக்குரிய இருநிலைகள் ஏற்படுத்திய சட்டமிது. உலகமியங்கும் அடிப்படையான ஒருமையினின்று மாறிய அடிப்படையில் நடப்பது அகந்தை. அதற்கும் முழுமையுண்டு. ஆனால், அது வேறுபட்டது. இந்த நடைமுறை மனத்திற்குரியது. நிலையில்லாத நிலை எனப்படும். இந்நிலையில் மனத்தின் அறிவை விரிவுபடுத்துவது ஆபத்தாகும், குழப்பம் விளைவிக்கும். தெளிவான வாழ்வுக்கு எதிரானது அது. இதுவே கீதை வலியுறுத்துவது. அறிவில்லாத மக்கள் என நாம் நினைக்கும் மக்களுக்கு வாழ்வில் அஸ்திவாரமான பற்றுக் கோடுண்டு. அதற்குரிய “அறிவு” அவர்கட்குண்டு. அது அசையும்படி அல்லது சிதறும்படி நடப்பது தவறு. உயர்ந்த மனிதனை அவர்கள் பின்பற்றலாம். உயர்ந்த தத்துவத்தை அவர்கள் அறியமுடியாது. உயர்ந்த மனிதனுடைய உயர்ந்த ஞானத்தை அறிய அவர்கள் முற்பட்டால், அவர்களுக்குப் பாதுகாப்பாக உள்ள வாழ்வின் அஸ்திவாரம் ஆட்டம் காணும்.

புனித வாழ்வின் அழைப்பு புளகாங்கிதம் தருவது. அதற்காக எதையும் தியாகம் செய்யலாம். பெரிய ஆத்மாக்கள் அத்தியாகத்தை ஏற்க முன்வந்துள்ளனர். மேற்கூறிய குழப்பம் அதுபோன்றது. குழப்பத்தில் வரும் சிரமத்தையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. சிரமம் தற்காலிகமானது என அவர் அறிவார். ஆனால் சரியான முறை என்பது வேறு. முன்னேற்றத்திற்கு அது துணை நிற்கவேண்டும். மலர்ந்த வாழ்வின் புதிய திறனை நாம் கண்டுகொள்ளுதல் அம்முன்னேற்றத்தைத் தரும். அதனால் புதிய

வாழ்வின் உண்மைகள் எழும். வாழ்வு எனும் அரங்கம் வகுக்கும் புதிய சட்டங்களாக அவையிருக்கும். சூரியன் உலகைச் சுற்றிவருவதை நம் கண் - புலன் - காண்கிறது. புலன்கட்கு பூமி மையம். இது தவறு. வாழ்வின் நோக்கங்கள் இவ்வடிப்படையில் அமைந்தவை. உண்மை நேர் எதிரானது. புதிய கருத்து, புதிய வாழ்வு மையத்தை ஏற்படுத்துகிறது. இது முறையான பகுத்தறிவுக்குரிய அறிவு. புலன்களை புதியவை ஏற்கின்றன. புலன்கள் புதிய கருத்தை ஏற்காவிடில் புது அறிவுக்குப் பலனில்லை. மனம் அகந்தையை மையமாகக் கருதுகிறது. இறைவனை அகந்தை தன் கண்ணோட்டத்தில் எடை போடுகிறது. உண்மையைத் தலைகீழே மாற்றவும், சிதறவும் அகந்தை முனைகிறது. மனித முன்னேற்றத்திற்கு இதுவும் ஒரு சமயம் பயன்படும். குத்துமதிப்பாக ஏற்பட்ட பண்பின் பரிவர்த்தனையே இது. நம் வாழ்வுக்கும், செயலுக்கும் ஓரளவு உதவும் முறையிது. இதுவே உயர்ந்ததும், முடிவானதுமில்லை. "சத்தியமே இலட்சியம், பொய் அன்று". அகந்தை இறைவனது மையம் என்பது உண்மையில்லை. அகந்தை சிருஷ்டிக்கும் மையமாகாது. இறைவனை அகந்தையால் அறிய முடியாது என்பதே உண்மை.

இருநிலைகளை ஏற்கும் மனமும் இறைவனைக் கணிக்க முடியாது. இறைவனே மையம். மனிதனுடைய அனுபவத்தில் உண்மையில்லை. மனிதனுடைய அனுபவத்தின் உண்மையை அறிய நாம் பிரபஞ்சத்தின் மூலம் முயல வேண்டும். மேலும் இறைவன் மூலமும் முயல்வதவசியம். இவை வேறுபட்ட மூன்று நிலைகள். ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்குப் போவது உள்ள ஒழுங்கு முறையைக் கலைக்கும். கலைந்தது ஒரு வழியாக வேறொரு முறையாக அடங்கும். புதிய மதங்களும், புதிய தத்துவங்களும் அப்படியே உற்பத்தியாகின்றன. பழைய தவற்றை நீக்கி, புதியது சரியானதை ஏற்படுத்த புதிய அறிவுக்குரிய அஸ்திவாரம் தேவை. அது சுமுகமான மாற்றமாக இருக்காது. புயலாகவே இருக்கும். புதிய அஸ்திவாரமும் புயலாகவே அமையும். அடிப்படையானது எது எனக் காண்போம். அதை ஒட்டிய பயன்தரும் பகுத்தறிவை நாடுவோம்.



அகந்தைக்குரிய பண்புகள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அவ்வழி புதியன புறப்படும். நம் இன்றைய வாழ்வை மாற்றி, தெய்வீக வாழ்வுக்கு அது அடிகோலும். உலகில் வாழ்வுக்குரிய அம்சங்களில் நம் திறமைகள் தெளிவாக, தெய்வீகமாகச் செயல்படும்.

தெய்வீக வாழ்வை நாம் நமக்கேற்றபடி எடுத்துக் கொள்கிறோம். நம் வாழ்வின் அடிப்படைகளுக்கேற்ப நாம் தெய்வநிலையை மனதால் மாற்றி அமைத்துக் கொள்கிறோமே தவிர அது நாம் தெய்வீக வாழ்வைப் புரிந்து கொண்டதாகாது. மனிதத்திறன் இதற்குரியது. புதிய சக்தியும், புதிய திறமையும் இவற்றைப் பொருத்தன. அகந்தைக்கு ஆயிரம் குருட்டுத் தைரியங்களுண்டு. அவற்றை ஒட்டியே அகந்தை செயல்படும். நாம் அம்மனநிலைகளிலிருந்து விடுபடவேண்டும். அகந்தை விலகியபின், பூரணத்துடன் சுமுகத்தை நாடவேண்டும்.

சரியான உறவு பூரணத்திற்குரியது. இறைவனிடமிருந்து எழுந்து வருபவை அவை. வாழ்வின் அமைப்புகளை சத்தியத்தின் சட்டம் கடந்தது. வாழ்வு வையகத்தை நோக்கி நிமிர்ந்து நிற்கிறது. சத்தியமே அதன் பூரணம். அதுவே விடுதலை. அகந்தை அதனுடைய பண்புகளை உருவாக்கியது. அவற்றை அழிப்பதே இலட்சியம். ஆனால் அதுவே மகுடமன்று, துன்பம், தீமை, மடமை, சிறுமை ஆகியவையுள்ளன. அவற்றைக் கடப்பதே சிகரம்.

தெய்வீக வாழ்வின் அம்சங்களெவை? அவை அகந்தைக்குட் பட்டவையா? அப்படியானால், உலக வாழ்வில் அதை எய்த முடியாது. அகந்தையின் சிறுமைகள் எதையும் உலகில் இருந்து அழிக்க முடியாது. வாழ்வின் உண்மையான நிலை எது? ஒரு வேளை அது தனிமனிதனுக்குரியதா? அல்லது வாழ்வு பிரபஞ்சத்திற்குரியதா? அல்லது வாழ்வு எனும் சமூகத்தின் ஓரலையாகுமா? இருநிலைகள் என்பன என்ன? மனிதனுக்கும் வாழ்வுக்குமுரிய தொடர்பின் விளைவாகுமா? அல்லது இருநிலைகள் என்பன வாழ்வின் சாரத்திற்குரியதாகுமா? சிறுமை என்பன என்ன? நம் உடலும், மனமும் சிறுமையை எப்படிப் பிரதிபலிக்கும்? மரணம், அழிவு என்பதென்ன? வாழ்வுக்கு அவை முதற்படியா, முடிவான நிலையா?

ஆரம்பமா, முடிவா? இன்பமும், துன்பமும் பிரிக்க முடியாத உணர்ச்சிகளா? சந்தோஷமும் வருத்தமுமில்லாமல் உணர்வு எழ முடியாதா? சத்தியமும், தவறும் அறிவின் இருமுனைகளா? இவை உண்மையானால், இவ்வுலகில் இவற்றிலிருந்து நமக்கு விடுதலையில்லை. மனிதவாழ்வை விடுத்து, நிர்வாணமெய்தி விடுதலை பெறலாம். அது ஜடமான நம் உலகைப் போன்றதாக அமையாது.

மனம் கடந்ததைப் போற்றும். உள்ளதின் மீது உயிரையே வைத்திருக்கும். தன் நிலை மாறாதது என மனம் அறியும். இதையே மனித வாழ்வு என மனம் அறியும். இவற்றிலிருந்து மாற முடியும் என்றோ, மாற வேண்டும் என்றோ மனத்தால் நினைக்க முடிவதில்லை. சார்லஸ் டார்வின் தம் பரிணாமக் கொள்கையில் குரங்கு மனிதனாயிற்று என்றார். மனிதன் சத்தியஜீவனாகும் பரிணாமத்தைப் பொருத்தவரை நாம் டார்வினுடைய குரங்காக இருக்கிறோம். மனிதக் குரங்கு காட்டிற்குரியது. நாமறிந்த மனிதனாக தான் மாறமுடியும் என குரங்குக்குத் தோன்றமுடியாது. மனிதனுக்குக் குரங்கிற்கில்லாத புதியது ஒன்றுண்டு. அது பகுத்தறிவு. பகுத்தறிவால் மனிதன் உலக விஷயங்களைப் பகுத்துணர்கிறான். தன் உள்ளேயுள்ள உணர்வுகளை அறியவும் பகுத்தறிவை மனிதன் பயன்படுத்துகிறான். பழக்கத்தாலும், விலங்குணர்வாலும் இன்று மனிதன் செயல்படுகிறான். ஆனால் பகுத்தறிவு அவற்றை மிஞ்சக் கூடியது. குரங்காக இருந்தபொழுது இருந்த காட்டுவாழ்வைக் கடந்துவந்த மனிதன், வீடு கட்டுகிறான், கடலை ஆள்கிறான், புயலையும், வெள்ளத்தையும் வெல்கிறான், சட்டமியற்றுகிறான், மனம் வளர்ந்து, ஆன்மவிழிப்பை நாடுகிறான். மனிதக்குரங்கால் இவற்றை நினைக்கமுடியுமா? தீர்க்கதரிசனம் அதற்குண்டா? இவற்றையெல்லாம் குரங்கால் சிந்திக்க முடியும் என்று கொண்டாலும், ஒரு நாள் தானே அந்த மனிதனாகப் போவது அதற்குத் தெரியுமா? மனிதன் பகுத்தறிவு பெற்றான். கற்பனையும், ஞானமும் அவனுக்குண்டு. மனிதவாழ்வைவிட உயர்ந்த வாழ்வை அவனால்



நினைக்க முடியும். அந்த வாழ்வுக்குத் தன்னை உயர்த்த வேண்டும் எனவும் அவனால் கருத முடியும். பரம்பொருளின் நிலையை மனிதன் அறிவான். அந்நிலை குறையற்றது, விரும்பத்தக்கது எனவும் மனிதனுக்குத் தெரியும். தவறற்ற ஞானமுண்டு என மனிதனுக்குப் புரியும். ஆனந்தம் என்பது வலியற்ற நிலை என்பது அவனுக்கு விளங்கும். தோல்வியற்ற சக்தியை அவனால் கற்பனை செய்யமுடியும். தூய்மையும், பூரணமும் மனிதனுக்கு குறையற்றதாகும், வரையறையற்றதாகும். தெய்வம் அத்தகையது என மனிதன் நினைக்கிறான். அவனறியும் சொர்க்கம் அப்படிப்பட்டதேயாகும். ஆனால் பகுத்தறிவு அவற்றை ஏற்காது. தெய்வம் குறையற்ற நிறைவுள்ளது என மனிதன் நினைப்பது அவன் தன் சிறப்பை அறிவதாகும். "எதிர்காலத்தில் நீயே மனிதனாவாய்" எனக் குரங்கிடம் கூறியிருந்தால் அது திகைப்புற்றிருக்கும். மனிதனுடைய தெய்வீகக் கனவை உலகில் அடைய முடியும் என்றால் மனிதனுக்கும் திகைப்பேற்படுகிறது. ஆனால் பகுத்தறிவு மறுக்கிறது. மறுத்தது தன்னை வலியுறுத்துகிறது. பகுத்தறிவு கற்பனையையும், ஞானத்தையும் ஏற்க முன்வரவில்லை. ஜடமான வாழ்வை பகுத்தறிவு சாஸ்வதமாக நம்புகிறது. பூலோகச் சொர்க்கம் எனும் கனவு பகுத்தறிவுக்கு மூட நம்பிக்கையாகப்படுகிறது. நடக்காததை இலட்சியமாக நம்பும் ஆர்வமென விளக்கம் தருகிறது. அறிவுக்கு அளவுண்டு, சந்தோஷத்திற்கு எல்லையுண்டு, நல்லது என்பது நிலையற்றது என்று பகுத்தறிவு கருதுகிறது.

குழப்பத்தை விலக்கி, ஒழுங்கை ஏற்பது பகுத்தறிவு. இல்லாதவற்றை விலக்கி, பயன்படும் நல்லதை ஏற்க பகுத்தறிவு பயன்படும். அடிப்படையில் பகுத்தறிவு இறைவனை நாடுகிறது. தவற்றை விலக்கவோ, முடிவாக விலக்கவோ பகுத்தறிவு முயலவில்லை. பெரிய உண்மையையும் அது நாடவில்லை. முடிவான சத்தியமே அதன் இலக்கு. அப்படிப்பட்ட சத்தியம், நித்தியம். இருநிலைகள் என்பனவெல்லாம் முடிவில் அச்சத்தியத்தை நாடுகின்றன. இன்று நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தும் உயர்ந்த

முறைகள் அப்படிக் கூறவில்லை. எனினும் அது முடியும். அந்த ஞானம், பகுத்தறிவுக்குச் சொந்தமானது. கலப்பற்ற சந்தோஷத்தை மனிதனால் நினைக்க முடியும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். துன்பம் அழியாது என மனம் திட்டவட்டமாகக் கூறுகிறது. அதுவே துன்பத்திற்குக் காரணம். இதயத்தின் பின்னுள்ள நம்பிக்கையைப் பகுத்தறிவு எட்ட முடியும். அது நம்பிக்கையின் உறைவிடம். அந்த நம்பிக்கையால் குறையை விலக்க முடியும் என்று நம்பமுடியும். இதுவே பகுத்தறிவின் பங்கு. உடலிடம் வந்தால் இதயம் செயலற்றுப்போவதை பகவான் சுட்டிக் காட்டுகிறார். நம்மால் வலி அழியக்கூடியது என நம்ப முடியாது. அதனால்தான் இதுவரை எவரும் மரணம் அழியக் கூடியது என்று நினைக்கவில்லை. ஸ்ரீ அரவிந்தர், “வலியை மறுப்பதே நம் பிறப்புரிமை” என்கிறார். நம் உணர்வின் திறனுக்குட்பட்ட செயல் அது எனவும் கூறுகிறார். இவையெல்லாம் நடக்கா என்பது பகுத்தறிவின் இன்றைய நிலை.

ஸ்ரீ அரவிந்தர் பகுத்தறிவுக்குப் பெரிய இடம் அளிக்கிறார். தத்துவத்திலிருந்து நடைமுறைக்கு வரும்பொழுது பகுத்தறிவின் பெருந் திறனை விளக்குகிறார். மனிதனால் உயர்ந்து நினைக்க முடியும் என்றாலும், நடைமுறையில் அவ்வெண்ணம் ஈடேறுவதில்லை. நடைமுறை, எதிரிலுள்ள நிலைமை பயங்கரமானது. அதைக்கண்டு மனிதன் தைரியத்தை இழந்துவிடுகிறான். ஆனால், வித்தாக உள்ள தைரியமும், விபரமும் பெரியவை. தர்க்கரீதியாக அதிகமாகப் புரிந்துகொள்ளமுடியும். இன்று நடப்பது கடந்த கால வித்தன்றோ? இன்று வித்தாகவுள்ளது எதிர்கால யதார்த்தமாகுமன்றோ? அதுவேயுண்மை என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். முடிந்த காரியத்தைச் சிந்திக்கும் மனிதன் திறனற்றவனாகிறான். அடிப்படைக் காரணத்தைச் சிந்தித்தால், திறன் அதிகமாகும். சோகம், வலி, மரணம் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்களெவை? நம்மால் அதைக் காணமுடியும். ஞானமே திறன்.

முடிந்தவரை நாம் இலட்சியத்தைக் கடைப்பிடிக்கிறோம். தடைகளை விலக்க முயல்கிறோம். துன்பம், வலி ஆகியவற்றின்



காரணத்தைக் குறைக்க முயல்கிறோம். தடைகளை விலக்க முயல்கிறோம். பிறப்பைக் குறைக்க விஞ்ஞானம் நினைக்கிறது. புதிய புதிய வழிகளைக் காண்கிறது விஞ்ஞானம். ஆயுளை நீட்டிக்க முயல்கிறது. மரணத்தை வெல்ல முடியாமற் போகலாம். இம்முயற்சி கீழிருந்து மேலே போவதாகும். அடிப்படைக் காரணங்களைக் கண்டுபிடித்து விலக்கும் முறை இது அன்று. கண்டுபிடித்தால்தான் திருவுருமாற்ற முடியும். நாம் நாடுவது இரண்டாம்பட்சமான காரணங்களாகும். பிடிக்காதவற்றை நாம் ஒத்திப் போடுகிறோம். இவை புறக்காரணங்கள். விஞ்ஞானம் நாடுவது இவற்றையே. அதனால் இது சரியான முறையாகாது. விஞ்ஞானம் புறவிஷயங்களை அளக்கும் கருவிகளைக் கண்டுபிடித்தால், அவற்றை நாடுவது இயல்பே. அடிப்படையை அறிய நாம் சாரத்தை உணரவேண்டும். உள்ளதை உயர்வாகச் செய்வதை விஞ்ஞானம் நாடுகிறது. அது அடிப்படையை மறந்துவிட்டது. இவை அனைத்தும் பகுதியான முயற்சி, முழுமையானதன்று. அடிப்படைக் காரணங்களும், சுபாவமும் புரியுமானால் நம்மால் இவற்றை – நோய், மரணம் – ஆளமுடியும். வலி, துன்பம், குறை நமக்குக் கட்டுப்படும். ஆனந்தம் நாம் தேடுவது. அமரத்வம் நமக்குடையது. ஞானம் நம் ஆத்மாவின் உரிமை. இவையே மனிதனுடைய முடிவான இலட்சியங்கள். நம்முள் உள்ள ஞானம் இதை அறியும்.

பிரபஞ்சமும், அதன் அடிப்படை உண்மையும், பிரம்மம் என வேதாந்தம் கூறுகிறது. சச்சிதானந்தம் பிரம்மத்தின் பிரகிருதி எனவும் கூறுகிறது. அதுவே அவர்கள் ஆத்மானுபவம். இத்தத்துவம் நமக்கும் பலன் தரும். நன்மையும், ஆனந்தமும், அமரத்துவமும் நம்முடையதாகும்.

வாழ்வு பிரபஞ்சத்தின் அமரவாழ்வு என ரிஷிகள் கண்டனர். நாம் அறியும் உணர்ச்சிகளும், கிளர்ச்சிகளும் ஆனந்தத்தின் அலைகள் என்றனர். எண்ண ஓட்டங்கள், மனதைத் தொடுபவை அனைத்தும் உலகை ஊடுருவும் சத்தியத்தின் கதிர்கள் எனவும் அவ்விருஷிகள் கூறினர். செயல்கள் எல்லாம், பிரபஞ்சத்தின்

செயல்கள், நித்தியமான சத்தியம், நிதர்சனமான நற்பயனை ஈவது என்றனர்.

சக்தி ரூபத்தை ஏற்றால் உணர்வின் அலை, சத்தியத்தின் பிழம்பு, நற்செயல்கள் எழுகின்றன. ரூபங்கள் அனந்தம். நோக்கங்களாலும், அவற்றின் மாறுதல்களாலும் புது ரூபங்கள் உருவாகின்றன. அவை சக்தியின் செயல்கள். ஒன்று, பலவாகும் பொழுது அகந்தை உருப் பெறுகிறது. ஒன்று, பலவாக மாறும்பொழுது உருவம் குறைபட முடியும். அது தற்காலிகமானது, ஆனால் தவிர்க்க முடியாதது. அகந்தை என்பது ஜீவியத்தின் சிறு உருவம். விரும்பி முழுமையிலிருந்து விலகுவதால் ஏற்படுவது அகந்தை. பல ரூபங்கள் உள்ளபொழுது, ஒன்றில் தன்னை ஜீவியம் மறப்பதால் அகந்தை பிறக்கிறது. பல்வேறு நோக்கங்கள் உள்ளபொழுது, அவற்றுள் சிலவற்றைப் பிரித்து எடுத்து, அவ்வெல்லைக்குள் அகந்தை வளர்கிறது. ஆயிரம் போக்குள்ளபொழுது, அகந்தை ஒன்றைப் பிரித்து தனித்தெடுத்துச் செயல்படும் தன்மையுடையது. அகந்தையின் இச்செயல் அமரத்துவத்தை மரணமாக்குகிறது. பல நல்லனவுள்ள பொழுது, அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதால் நல்லது கெட்டதாக மாறுகிறது. தேர்ந்தெடுத்தது, எல்லையை ஏற்படுத்துவதால், ஆனந்தம் வலியாக மாறுகிறது. ஞானத்திற்கு தவறு என்ற குறையை இதனால் ஏற்படுத்த முடிகிறது. நித்திய ஆனந்தம் சிருஷ்டிக்குரியது. ஒன்றை மற்றதினின்று பிரித்தெடுப்பதால் ஆனந்தம் இருநிலைகளாகப் பிரிந்து வலியும், சந்தோஷமுமாகின்றன. முதல் நிலையை நாம் மீண்டும் நாடலாம். அதன்மூலம் துன்பம், வலி, தீமை, மரணம், சந்தோஷம், ஆனந்தம், நல்லது, அமர வாழ்வாக மாற முடியும். அகந்தை இம்மாற்றத்தால் அழியும். ஆன்மாவுக்குரிய பண்புகளை நாம் மீண்டும் அடையலாம். ஆன்மா இழந்த பண்பை மீண்டும் பெறுவதால், ஜீவாத்மா இறைவனுடன் மீண்டும் பூவுலகத்திற்குரிய உறவைக் கொண்டாடலாம்.



**(Later vedanta)** பிற்காலத்தவருக்குப் புதிய எண்ணம் தோன்றியது. அகந்தையே இரு நிலைகளுக்குக் காரணம் என்றனர். அகந்தை உலகத்திற்கு அவசியம் என்று கண்டனர். அகந்தையின் அறியாமையை விலக்கலாம், நமக்குள்ள தடையைக் களையலாம் என்றனர். அதனால் இரு நிலைகள் அகலும். அப்படிச் செய்வதால் நாமும் உலகைவிட்டுப் போகவேண்டும். நாம் தீமையான பிரபஞ்சத்தை அடைவோம். அது மாயையும் கூட. அவ்வழியில் பூரணம் பெறுவது – இவ்வுலகில் – முடியாததாகும். நித்தியமான சத்தியத்தை இவ்வழியில் பெறமுடியாது. தீமையுடன் தொடர்புள்ள நன்மையை அடையலாம். பூரண நல்லதை அடையமுடியாது. இது அவர்கள் விளக்கம். இதைக் கடந்த நிலையுண்டு. அகந்தையை இடைப்பட்ட நிலையாகக் கருதும் இலட்சியம் அது. அகந்தையைக் கடந்த நிலையாகும் அந்நிலை. அந்நிலையில் தீமையில்லை, இக்காலத்தவர் வேதாந்தத்தின் மூலம் வாழ்வை விட்டகல முயல்கின்றனர். வாழ்வைப் பூரணப்படுத்த நாம் வேதாந்தத்தைப் பயன்படுத்தமுடியும். உலகை சிருஷ்டித்தது அகந்தையில்லை, ஈஸ்வரன். ஈஸ்வரன், புருஷன் என நாம் கூறுவது ஒன்றே. சிருஷ்டி அவன் வெளிப்பாடே. அவனே ஜீவாத்மா. ஜீவாத்மா, பிரபஞ்சத்தின் மறு உருவம். அகந்தைக்கு அளவுண்டு, மனித உலகத்திற்கு அகந்தை அவசியம். பிரபஞ்சம் செழிக்க அகந்தை தேவையில்லை.

இடைப்பட்ட நிலை தன் நிலை என அகந்தையால் அறியமுடியும். அதை ஏற்றால், அந்நிலையைக் கடக்க முடியும். தற்சமயம் அகந்தை வாழ்வின் சிறுமையைப் பிரதிபலிக்கிறது. புதிய கோணத்தில் அகந்தை வாழ்வின் ஒளியைப் பிரதிபலிக்க முடியும். அதையுணர்ந்த அகந்தை கரைந்து, பிரபஞ்சத்தில் புது மையமாக மாறும். மனிதச்செயல்கள் இன்று அகந்தையின் செயல்கள். மனிதச் செயலை ஏற்றுப் போற்றிப், பாராட்டி, சுமுகமாக்கி, திருவுருமாற்றி, தெய்வச்செயலாக்க முடியும். அது பிரபஞ்சவாழ்வாகும்.

மனிதவாழ்வின் அடித்தளம் சத்புருஷன் வெளிப்படும் வாழ்வாக அமையும். அதனுள் ஜடமும் அடக்கம். ஜடஉலகின் எந்த அம்சத்தையும்

விலக்க வேண்டிய அவசியமில்லை. இன்று நாம் அகந்தைக்காக வாழ்கிறோம். நம் செயலுக்குரிய உண்மை அதுவன்று. சத்புருஷன் வாழ்வும், ஜடமுமாகும். மனத்தினின்றும், வாழ்வினின்றும் புருஷன் வெளிப்படுகிறான். சத்திய ஜீவியத்தினின்றும் சத்புருஷன் வெளிப்படுகிறான். நம் செயல்கள் அந்த வெளிப்பாட்டில், மனிதனுடைய பங்காகும். மனிதன் பிரபஞ்சத்தின் பிரதிபிம்பம். உடலில் இறைவனை வெளிப்படுத்துபவன் மனிதன். இதற்காக ஏற்பட்டது பரிணாமம். ஜடத்தில் மனிதனுதித்தது பரிணாமம். அகந்தை இடைப்பட்டது. அகந்தை தெளிவானது. ஒன்றான இறைவன் பல ஜீவன்களாக மாற அகந்தை வழி செய்கிறது. இது நம்மையறியாமல் நடப்பது. விவரமற்ற முழுமை பொதுவாகப் பரவிய நிலையாகும், இதை ரிக் வேதம் *ஹிருதய சமுத்திரம்* என்கிறது. அகந்தையின் முதற்கடமை இருநிலைகளை - துன்பம், இன்பம், இருள், ஒளி, சத்தியம், பொய் - ஏற்படுத்துவதாகும். சிருஷ்டி செயற்கை முறையாகும். முழுமையான சத்தியம், ஆனந்தம், நல்லது ஆகியவற்றை சிருஷ்டி விலக்குகிறது. ஜீவன் மலர்ந்து இறைவனை நோக்கி உயர்ந்தால், அகந்தை கரையும். அது இறைவனுக்குரிய பூரணம். அகந்தை திருவுருமாறுவதால் ஜீவன், அனைத்து ஜீவனையும் உணரமுடிகிறது. அகந்தை, இம்மாற்றத்தால், இறைவனுக்குரிய சுதந்திரம், ஐக்கியத்தின் இருப்பிடமாகிறது. அதுவே இறைவன் திருவுள்ளம் பூர்த்தியாவதாகும். இதன்மூலம் சத்து, சித்து, ஆனந்தம் ஜீவாத்மாக்களில் வெளிப்பட்டுப் பூர்த்தியாகிறது. பரிணாமம் வளரும் வழி அது. ஜட உலகம் இப்புனர்ஜன்மத்திற்குரியது. சிருஷ்டி அதன் பிரசவமுயற்சி.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சரணாகதியை எளிதில் புரிந்து கொள்ளலாம். பின்பற்றுவது சிரமம்.



# அன்பர் கடிதம்

**அன்னையின் அருளைப் பெண்ணின் திருமணத்தில் பார்த்ததைத் தெரிவிக்கும் கடிதம்:**

அன்னைக்கு வந்தனம்.

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஒரு நாள் ஒரு பற்று ஏற்படுகிறது. அவ்வாறே என் வாழ்விலும் அன்னையை நினைத்து வழிபடும் நேரம் வந்துவிட்டது.

நான் என் பெண்ணிற்கு வரன் பார்த்துக் கொண்டிருந்தேன். சில மாதங்களுக்கு முன்பு இங்குள்ள தியானமையத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. அன்று மாலை நான் என் குடும்பத்தாருடன் சென்று வணங்கினேன். என்னுடைய மனைவி ஏற்கனவே சிறிய வயதில் பாண்டிச்சேரியில் அன்னையை நேரில் பார்த்திருந்ததால் அங்குள்ளவர் அவளிடம் மிகுந்த பிரியத்துடன் பழகினார்கள்.

பிறகு ஒரு நாள் நானும் என் பெண்ணும் ஓர் ஊருக்குப் பயணம் செய்யும்போது “அருளமுதம்” புத்தகம் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. அதுவே எனக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அதனால் மேலும் அன்னையின்மேல் அதிகப் பற்று ஏற்பட்டது. உடனே தினமும் தியானத்தில் ஈடுபட்டு அன்னையிடம் என்னுடைய வேண்டுதல்களை மனதாரச் சமர்ப்பித்தேன்.

சில நாட்களில் ஒரு ஜாதகம் எனக்கு வந்தது. அதை எடுத்துக்கொண்டு நானும் என் மனைவியும் தியானமையத்துக்குச் சென்று அன்னையிடம் வைத்து வேண்டினோம். அடுத்த நாளே நாங்கள் ஏற்கனவே பார்த்துக்கொண்டிருந்த வரன்களில் இருந்து ஒன்று (திருச்சி) ஜாதகம் சேர்ந்திருப்பதாகச் செய்திவந்தது. மேற்கொண்டு கடிதப்போக்குவரத்துகளில் அவர்கள் பெண்ணுடைய

**photo** அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்கள். பிறகு பெண் பார்க்கும் நிகழ்ச்சி முடிந்து நிச்சயதார்த்தம், முகூர்த்தத்திற்கும் நாள் பார்க்கச் சொன்னார்கள். இவையனைத்தும் அன்னையின் அருளினாலே நடைபெற்றன.

உடனே நாங்கள் பார்த்த முகூர்த்த தேதியில் கல்யாண மண்டபம் எங்கள் **colony** யிலேயே கிடைக்க அன்னையைப் பிரார்த்தித்தேன். அதன்படியே அந்த நாட்களில் கல்யாண மண்டபம் காலியாகக் கிடைத்தது. உடனே மண்டபம் **book** பண்ணினோம்.

மேற்கொண்டு ஒவ்வொரு காரியத்திலும் ஜவுளி, பத்திரிகை அன்னையை வேண்டி ஆரம்பித்தோம். ஒவ்வொன்றாக எந்தவிதக் கஷ்டமும் இல்லாமல் நன்றாக நடைபெற்றது. கல்யாணத்திற்குச் சில நாட்கள் முன்பு சரியான மழை பெய்தது. இருந்தும் அன்னையின் அருளால் சுமங்கலி பிரார்த்தனை, சமாராதனை போன்ற சுபகாரியங்கள் நன்கு நடைபெற்றன. கல்யாணத்திற்கு 2 நாட்கள் முன்னதாக மழை நின்றுவிட ஆரம்பித்து கல்யாணத்தன்று முற்றிலுமாக நின்றுவிட்டது. கல்யாணமும் மிகச்சிறப்பான முறையில் ஒவ்வொருவரும் பாராட்டும்வண்ணம் அமைந்தது. எத்தனையோ நண்பர்கள் நல்லமுறையிலும் எங்களுக்கு அன்னையின் அருளால் உதவி புரிந்தார்கள்.

தற்போது என் பெண்ணிற்குத் தனிக்குடித்தனமும் வைத்துவிட்டோம். நல்லமுறையில் வாழ அன்னையைப் பிரார்த்தித்து என்னுடைய வந்தனங்களை அன்னைக்குச் சமர்ப்பித்து இச்செய்தியைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**நம்பாதவருக்கும் செயல்பட்ட அன்னையை பற்றிக் கூறும் கடிதம்:**

சமீபத்தில் என் இரண்டாவது மகன் **M.Sc** முடித்து **Ph.D**க்குப் பல இடங்களில் அவன் விரும்பும் **Nuclear Physics subject** க்கு விண்ணப்பித்தான். நெல்லை மனோன்மணியம் **university** யிலும் போட்டிருந்தான். கல்கத்தாவில் முயற்சி செய்யச் சென்றவன் இங்குள்ள அவனுடைய **professor seat** கிடைக்கும், உடனே புறப்பட்டு வா என்று சொன்னதன் பேரில் உடனே வந்தான். ஆனால் **seat** கிடைக்கவில்லை. ஒரு மாதத்திற்கும் மேல் ஆயிற்று. தினமும் சாப்பிடாமல் இராப்பகலாக **university**யில் **senior** களுக்கு உதவி செய்து சோர்ந்து வருவான். இவனுக்கு அவன் அப்பாவும் ஒரு உதவியும் புரியவில்லை. இவன் அப்பா வந்து சொன்னால் **guide seat** தருவார், என்னை **ignore** செய்கிறார் என்று கோபப்பட்டான். அவன் அப்பா இத்தனைக்கும் **professor**. ரொம்ப முற்றி வீடே ரணகளமாகிவிட்டது. எனக்கு அவனுடைய திறமைக்கு எப்படியும் கிடைக்கும் என்றதால் முதலில் கவலைப்படவில்லை. அவன் ஒரு நாள் நான் படிப்பை, பட்டத்தை வீசிவிட்டு வேலைக்குச் செல்கிறேன் என்று ரொம்ப நொந்து அழுதான். அவன்கூடப் படித்தவனுக்கு **seat** கிடைத்து **stipend** உடன் சேர்ந்து ஒரு மாதமாகிவிட்டது. இவனுக்குக் கல்கத்தா சீட்டும் இல்லாமல், இதுவும் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஒரே அழுகையாக வந்தது. நான் இதுவரை என் மற்ற பிள்ளைகளுக்கு அன்னையை வேண்டி, காணிக்கை செலுத்தி அன்னை அருள் கிடைக்கப்பெற்றேன். இவனுக்கு இதுவரை செய்யவில்லை. ஏனெனில் அவன் தீவிர இந்து. நம்பமாட்டான். அதனால் எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அன்னையை மனமுருக வேண்டி, காணிக்கை அனுப்பினேன். 3ஆம் நாள் ரசீது கிடைத்தது. காணிக்கை அனுப்பிய அன்றே அவன் அப்பா முயன்று **seat** க்கு ஏற்பாடு நடந்தது. 4ஆம் நாள் **order** நேரே வந்துவிட்டது. அவன் மறுவாரம் **join** செய்தான் சந்தோஷமாக. என்னே அன்னையின் அருள். நான் மெய் சிலிர்த்துவிட்டேன். நம்பாதவருக்கும் அவர்கள் திறமையின் மூலம் செயல்பட்டு அன்னை அருள்புரிவார் என்று நான் படித்த வாசகங்கள் நிரூபிக்கப்பட்டன கண்டு அப்படியே என் மனம் உருகிவிட்டது. தாயினும் சாலப்பரிந்த அன்னையின் திருவடிக்கு நெஞ்சாரக் கைகூப்பி நன்றி சொன்னேன்.

❊ ❊ ❊

"அன்பர் உரை''

## நம்மிடம் சின்சிரிட்டியும், நம்பிக்கையும், பரிசுத்தமுமிருந்தால், அன்னையிடமிருந்து நாம் பெற்ற நல்லது நம்மை விட்டுப்போகாது, நம்மிடமிருந்து விலகிய கெட்டது மீண்டும் நம்மை நோக்கி வாராது

*(28.3.99 அன்று சென்னை-பெரம்பூர் "ரிஷி இல்லம்" தியான மையத்தில் திருமதி ரேவதி சங்கரன் நிகழ்த்திய உரை)*

* அன்னை அருளால் பெறுவது நம்மை விட்டுப் போகாது.
* சத்திய ஜீவியத்தால் குணமாகும் வியாதி மீண்டும் வாராது.
* ஒரு பிரச்சினையைப் பிரார்த்தனையால் மட்டுமன்று, மனமாற்றத்தாலும் விலக்கினால் அது மீண்டும் வருவதில்லை.
* பிரச்சினை தீரும்பொழுது ஜீவியம் எழுந்தால் பிரச்சினை திருவுருமாறி வாய்ப்பாகும்.
* அன்னை அருள் முழு நம்பிக்கையுள்ள இடத்தில் நேரடியாகச் செயல்படும்.
* நம்பிக்கை எதிலிருக்கிறதோ (2-ஆம் மனத்தில் நம்பிக்கை இருக்கும்) அதன் மூலமாக அருள் செயல்பட்டால், கிடைப்பது அப்பொழுதுள்ள பிரச்சினையைத் தீர்க்கும். நிலையாக இருக்காது.
* அருள் மனம், உடல், உணர்வு, சூழல், சந்தர்ப்பம் ஆகிய எதன் மூலமாகவும் செயல்படும்.
* நல்லதைப் பெறுவதற்குள்ள சட்டமும், கெட்டதை விலக்குவதற்குள்ள சட்டமும் ஒன்றே.

கட்டி உடைந்தால் துடைத்துக் கட்டுப்போடும் பொழுது, அது மீண்டும் வருவதுண்டு. கட்டியினுள் உள்ள முளையை அகற்றிவிட்டால், அது மீண்டும் வாராது. முளையிருந்தால் அது



மீண்டும் வரும். மனப்பாடம் செய்தால் மார்க் வரும், பாடம் வாராது. ஒருமுறை பாடம் புரிந்தால் அது மனதை விட்டகலாது.

ஒரு முக்கியமான வேலைக்குப் போகும்பொழுது கோபம் வரக்கூடாது என முயன்றால், அது வருவதில்லை. பிரார்த்தனை செய்தாலும் வருவதில்லை. நம் முயற்சியும், பிரார்த்தனையும் அச்சந்தர்ப்பத்திற்குரியன. நம் குணத்தின் வேரைத் தொடுவதில்லை. கோபத்தின் வேர் உணர்வின் இயலாமை. பிரார்த்தனை அந்த ஆழத்தைத் தொட்டால் அருள் அங்குச் சென்றால் கோபமும், கோபப்படும் குணமும், கோபத்தின் சந்தர்ப்பங்களும், வேரும் அறுந்து போகும். இனி கோபம் வாராது.

ஒரு வீட்டில் களவு போனால் திருடனைப் போலீஸ்காரன் பிடிக்கின்றான். அத்துடன் ஊரில் திருடு நிற்பதில்லை. திருடன் ஒரு கூட்டத்தில் ஒருவன். மற்றவர்கள் திருடுவார்கள். அந்தக் கூட்டத்தையே பிடித்து ஜெயிலில் போட்டால், அவர்கள் விடுதலையடையும்வரை அவர்களால் திருட முடியாது. விடுதலை பெற்றபின் திருட்டு ஆரம்பமாகும். அவர்களுக்கு வேலை கொடுத்தால், வாழ்நாள் முழுவதும் திருடும் தொழிலை விட்டுவிடுவார்கள். திருடுவது தவறு என்று அவர்கள் மனம் மாறினால் இனி அவர்களால் திருட முடியாது. அவர்கள் திருடாவிட்டாலும், மற்றவர்கள் திருடுவார்கள். உலகம் திருட்டை விட்டுவிட்டால், இனி திருட்டு இருக்காது. எந்த நிலைக்குப் பின்னாலும் வேறொரு நிலையிருப்பதைப்போல் ஜீவனிலும் பல நிலைகள் உண்டு.

அருளை நாம் கடைசி நிலையில் பெற்றால் அதன் மூலம் வருவது போகாது. அதனால் விலகுவது திரும்ப வாராது. அதற்குமுன் நிலைகளில் அருளைப் பெற்றால் அதன் பலன் குறைந்திருக்கும். மேல்மனம், மனம், உணர்வு, உடல், ஜீவன் என்ற பல நிலைகளில் ஜீவனில் அருளைப் பெறலாம். அதிலும் ஜீவனில் ஆன்மா விழிப்படைந்த நிலையே முடிவான நிலை.

அன்னை **sincerity** உண்மை என எதைக் குறிப்பிடுகிறார்கள்? இதை இருவகைகளாகச் சொல்லலாம். முதல்வகை முன்பு கூறியது. கடைசி நிலையில் அருளைப் பெறுவது **sincerity** எனப்படும் வகையாகச் சொன்னால்,

- *நாம் விரும்புவதை அன்னை செய்ய வேண்டும் என்பது ஆசை.*
- *அன்னை விரும்பும்படி நாம் நடக்க வேண்டும் என்பது sincerity உண்மை.*

**பிடிவாதம், உறுதி**

நல்லதை வலுவாகப் பிடித்துக்கொள்வது **firmness** உறுதி. கெட்டதை வலுவாகப் பற்றுதல் **stubbornness** பிடிவாதம்.

லஞ்சம் வாங்க மாட்டேன், காப்பியடிக்க மாட்டேன் என்பது உறுதி எனப்படும். சூதாட்டத்தை விடமாட்டேன், குடிப்பதை நிறுத்த மாட்டேன் என்பது பிடிவாதம் எனலாம். நல்லது, கெட்டது போக இதில் வேறோர் அம்சமும் உண்டு.

நான் இளைஞனாக இருக்கும்பொழுது ஷர்ட் என்றால் முழுக்கைச் சட்டை. அதன் பின் ஸ்டைல் மாறி அனைவரும் **slack shirt** போடுகின்றனர். என்னைப் போன்றவர்கள் அனைவரும் என் ஆபீசில் ஷர்ட்டை மாற்றிவிட்டனர். நான் மட்டும் மாற்றவில்லை என்றால், என்னால் பழக்கத்தை மாற்ற முடியவில்லை. உடல் **(physical)** ஒன்றைக் கற்றுக் கொண்டால் பிறகு மாறாது, அதனால் மாற முடியாது. அதே போல் உணர்வுக்கும் பழக்கம் உண்டு. நான் படித்துப் பட்டம் பெற்று பெரிய வேலையிலிருக்கிறேன். என் பால்ய நண்பன் 5 ஆம் வகுப்போடு நின்று கடையில் வேலை செய்கிறான். இன்று நான் ஊருக்கு வந்தால் என்னுடன் எல்லா இடங்களுக்கும் வருவான். பால்ய நட்பு. எனக்கு விஸ்வாசம் அதிகம். நான் டாக்டர், வக்கீல், பிரின்ஸ்பால் வீட்டிற்குப் போனால் உடன் வருவான், குறுக்கே பேசுவான். மானம் போகும். விடமுடியவில்லை என்பது உணர்வின்



பழக்கம். நான் என் மதக் கோட்பாடுகளை இளம் வயதில் தீவிரமாக ஏற்றவன். அவற்றுள் ஒன்று வட்டி பெறக் கூடாது என்பது. இன்று என்னிடம் ஏராளமாகப் பணமிருக்கிறது. பாங்கில் போட்டால் வட்டியுண்டு. அதை என் அறிவு தவறில்லை எனக் கூறுகிறது. ஏற்றுக்கொண்ட மதக் கோட்பாடு மனத்தில் தடையாக இருக்கிறது. விட முடியவில்லை.

**உடலின் பழக்கத்தில் விட முடியாதது பிடிவாதம்.**
**உணர்வின் பழக்கத்தில் விட முடியாதது பற்று.**
**அறிவின் அபிப்பிராயத்தில் விட முடியாதது opinion, அபிப்பிராயம்.**

இவற்றிற்கு அடுத்த உயர்ந்த நிலை ஆன்மா. என் வீட்டார் கேஸ் நடத்தியபொழுது கோர்ட்டில் கூண்டிலேறி ஒரு பொய் சொல்லச் சொன்னார்கள். என் ஆன்மா மறுத்தது. நான் உண்மையைச் சொல்லிவிட்டேன்.

**பிடிவாதம், பற்று, அபிப்பிராயம் ஆகியவற்றைப் பிடிவாதம் என்ற தலைப்பிலும், ஆன்மாவுக்கு உண்மையாக இருப்பதை உறுதி எனவும் நாம் கூறலாம்.**

***ஆன்மாவுக்கு உண்மையாக இருப்பதை அன்னை sincerity உண்மை என்கிறார்.***

நாம் ஆன்மாவுக்கு உண்மையாக இருக்கும்பொழுது அருளால் பெறும் நல்லது நம்மை விட்டுப் போவதில்லை. அந்நிலையில் நாம் விலக்கியது திரும்ப வருவதில்லை.

அன்னை புதுவை வந்த காலத்தில் மழைக்காலத்தில் புயல் தவறாமல் ஒரு முறை அல்லது இரு முறை வரும். நாளாவட்டத்தில் அது குறைந்து வந்தது. புயலால் பாதிக்கப்பட்ட அன்பர்கள் அன்னை அருளால் புயலை விலக்க முயன்றனர். அது பலித்தது. ஆண்டுதோறும்

புயல் அறிவிக்கப்பட்டால், அவர்கள் தொழில் புயலால் பாதிக்கப்படுவதால் அவர்கள் அருளை அழைப்பார்கள். கடந்த 38 ஆண்டுகளில் ஒரு முறை தவிர புயல் அவர்கள் தொழிலைப் பாதிக்கவில்லை. ஒரு முறை பாதித்தது 1972இல், அதன்பின் 25 ஆண்டுகளாக அது வரவில்லை. போனது திரும்ப வரவில்லை எனில் அன்பர்கள் அருளைச் சூழ்ந்து ஜீவனில் பெற்றுள்ளனர், **sincere** ஆக அன்னைக்கு வேலை செய்தனர் எனப் பொருள்.

டாக்டரிடம் போய் சர்க்கரை வியாதி என்றால் தகப்பனாருக்கு இருந்ததா என்கிறார். தலைமுறை தலைமுறையாக வியாதி தொடர்கிறது. வாழ்க்கையை ஆரம்பித்தவுடன் கடனாளியாகி விட்டான் எனில் அவனுடைய தகப்பனார் கடன்காரர் எனப் பெயர் வாங்கியவர். மகனும் அப்படியிருக்கிறான் என்பார்கள். குடும்பத்தில் சச்சரவு போய் சுமுகம் வந்தால் அதே சச்சரவு ஆபீசில் வருகிறது. அங்கிருந்து அது போனால் அது நண்பரிடையே வருகிறது. இப்படியிருந்தால் மனம் சச்சரவை விடவில்லை எனப் பொருள்.

தொழிலில் கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட் தொந்தரவு அடங்கியபின் இன்கம்டாக்ஸ் தொந்தரவு வருகிறது. அது போனபின் சேல்ஸ் டாக்ஸ்காரன் வருகிறான் எனில் நம் கணக்குச் சரியில்லை எனலாம். ஒருமுறை தொந்தரவு வந்தவுடன் எல்லாக் கணக்குகளையும் சரி செய்தவருக்கு அதன்பின் வருமான வரியோ, எந்த சர்க்கார் இலாக்காவோ தொந்தரவு தாராது.

**Cold war** முடிந்தவுடன் உலகம் பெருமூச்சு விட்டது. இராக்கிலும், ஆப்பிரிக்காவிலும், பாஸ்னியாவிலும் ஆக 28 இடங்களில் உள்நாட்டுப் போர் தொடங்கின. உலகயுத்தம் வரும் சந்தர்ப்பம் மறைந்தாலும், அடுத்த நிலையில் போர் என்பது மறையவில்லை என்றனர். ஜனநாயகம் ஒரு நாட்டுக்கு வந்துவிட்டால் அந்நாடு அதன்பின் போரை நாடுவதில்லை. அது முடிவான தீர்வு. அதுவும் பொருளாதார முன்னேற்றமும், ஜனநாயகத்துடன் வந்துவிட்டால் அந்நாடு போரை மறந்து விடுகிறது.

* நமக்குப் பிரச்சினை தலைக்கு மேல் வந்துவிட்டால் பகீரதப்



பிரயத்தனம் செய்கிறோம், பல சமயங்களில் தீரும். அட்மிஷன் வாங்க பெரியபாடு எனில் அது குடும்பத்தை விட்டுப் போகாது. திரும்பத்திரும்ப ஏதாவது ஒரு அட்மிஷனுக்குப் பாடுபட வேண்டியிருக்கும்.

* நாம் சிபார்சால் அட்மிஷன் பெற்றாலும், மார்க்கால் பெற்றாலும், பணத்தால் பெற்றாலும், அப்பிரச்சினை ஏதாவது ஒரு வழியாக வந்தபடியிருக்கும்.
* ஏதோ ஓர் அட்மிஷன் அன்னையை மட்டும் நம்பிப் பெற்றவர் வீட்டில் அதன்பின் அட்மிஷன் பிரச்சினை இருக்காது.
* பொறாமையால் அன்பர் மீது பொய் கேஸ் போட்டனர். ஒன்று போய் அடுத்தது வந்தபடி பல ஆண்டுகளிருந்தது. வக்கீலும், மற்றவர்களும், ஆபீஸில் உள்ளவர்களும் “இக்காலத்தில் நேராகப் போனால் கேஸ் நிச்சயமாகத் தோற்கும்” என்றனர். அன்பர் உறுதியாய் அன்னையை மட்டும் நம்பி உண்மையைக் கடைப்பிடித்தார். ஒவ்வொன்றாய் எல்லாக் கேஸ்களும் ஜெயித்தன. அதன்பின் வருஷம் 20 ஆயிற்று. அதன் சுவடேயில்லை.
* கணவனும் மனைவியும் சண்டை போடாத நாளில்லை என்ற வீட்டில் நிலைமை மாறி ஒரு மணி தவறாமல் சண்டை என்ற நிலை ஏற்பட்டது.
  - இவர்களுள் ஒருவர் அன்பர்.
  - முதலில் சண்டை போய் சுமுகத்தை நாடி பிரார்த்தனை செய்தார்.
  - சண்டை குறைந்தது.
  - பின், இவரால் சண்டை வருவதில்லை என்றாயிற்று.
  - அதன்பின் சுமுகம் வளர்ந்தது.
  - அடுத்தாற்போல் இவர் உள்ள இடத்தில் சண்டையில்லை என்ற நிலை.
  - சண்டை போடுபவர்கள் இவரிடம் வந்து சண்டையைத் தீர்த்துக் கொண்டனர்.
  - சண்டையை விட்டதுடன், சண்டைக்குக் காரணமான

குணத்தையும் விட அவர் முயன்றார். பாதி வெற்றி கிடைத்தது.

- குணத்தை அடியோடு அழிக்கவும், அதன் உற்பத்தி ஸ்தானமான **ego** அகந்தையை அழிக்கவும் முயன்றார்.
- அகந்தை அழிந்தால் **sincerity** ஏற்படும். சண்டைபோனால் திரும்ப வாராது.

* * *

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்னை நினைவுடன் ஒரு காரியத்தை ஆரம்பித்தால் அதே நினைவுடன் அதைப் பூர்த்தி செய்யவேண்டும்.

## இம்மாதத்தில் வரும் தரிசனநாள்

ஜனவரி 1 செல்வவள நாள்

## அடுத்த மாதத்தில் வரும் தரிசன நாட்கள்

பிப்ரவரி 21 அன்னையின் ஜன்ம தினம்
29 சத்தியஜீவிய தினம்



**"அனுபவக் கட்டுரை''**

# அன்பர் அனுபவம்

**அணையாத ஆர்வக்கனலை அன்பர்கள் நெஞ்சில் உருவாக்கும் அன்னை:**

ஆன்மீகம் என்றால் என்னவென்றே அறியாத நடுத்தர குடும்பத்தில் பிறந்த நான் சிறு வயதில் இருந்து விநாயகர், அன்னைப் பராசக்தி மற்றும் எல்லாத் தெய்வங்களையும் வழிபட்டு வந்தேன். நான் ஆறாம் வகுப்புப் படித்தபொழுது, பள்ளியிலிருந்து திரும்பி வரும் வழியில் வேர்க்கடலை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அந்தப் பேப்பரைப் படிக்க ஆரம்பித்தேன். அதில் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உபதேச மொழிகளின் ஒரு சிறு பகுதி இருந்தது. அதைப் படித்தவுடன் என்னுள் ஒரு பொறி பற்றி என் தேடுதலைத் தொடங்கி உள்ளேயும், வெளியேயும் அலைந்தேன். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் புத்தகங்களையும், ஸ்ரீ விவேகானந்தர் புத்தகங்களையும் மிக ஆவலாகத் தேடித்தேடிப் படிக்க ஆரம்பித்தேன். அதன் பயனாக அந்தத் தேடுதலில் இருந்த ஆவல் பன்மடங்குப் பெருகியது. மந்திரங்கள் மூலமாக அன்னைப் பராசக்தியை அடைய முடியும் என்ற நம்பிக்கையில் பல குருமார்களைத் தேடி தீட்சை பெற்றேன். ஸ்ரீ வித்யா உபாசனை, மற்றும் குண்டலினி பயிற்சியும் மேற்கொண்டு, ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடத்தில் தீட்சையும் பெற்றேன். அங்கே சில அனுபவங்களை அடைந்தேன்.

1973-இல் நவம்பர் 18ஆம் தேதி பாண்டிச்சேரி வானொலியில் ஸ்ரீ அன்னை மகா சமாதி ஆனதையும், ஸ்ரீ அன்னையின் திருவுடல் அன்பர்கள் தரிசனத்திற்காக வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் செவியுற்றேன். அதைக் கேட்டபொழுது என்னை ஈன்ற தாயை இழந்தாற்போல் துக்கம் மேலிட்டது. மேலும் ஒரு மணி நேரம் என்னால் எதுவும் செய்ய இயலவில்லை. பாண்டி சென்று

அன்னை அவர்களின் திருவுடலைத் தரிசிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தும் தனியே சென்று வர துணிவு இல்லாத காரணத்தால் அப்பொழுது செல்ல முடியவில்லை. என் ஆன்மிகப் பாதையில் ஸ்ரீ அன்னை முதலிலேயே வந்துவிட்ட பொழுதும், அவர் தம் அழைப்பு புரியாமல் வேறு தீட்சைகளையும், உபாசனைகளையும் நாடி அலைந்தேன். நான் நீண்ட நாட்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் புத்தகங்களைப் படித்து அவர்பால் ஈர்க்கப்பட்டேன். அவரது அமுத மொழிகள் அடங்கிய புத்தகங்கள் என் உடன் பிரியா உடமைகளாக இருந்தன. ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பெரிய திருவுருவப் படத்தை எனது அறையில் வைத்து அவருடன் மானசீகமாக உரையாடுவேன். எந்த ஒரு விஷயமானாலும் அவரிடம் கூறிவிட்டுத்தான் செய்வேன். சில சமயங்களில் அவருக்கு விசிறியால் விசிறுவேன். மலர் அஞ்சலி செலுத்துவேன். இப்படி எனக்குள் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அக்னி ஜுவாலையாக இருந்தபொழுதும் நான் சிறிது சிறிதாக ஸ்ரீ அன்னையால் ஈர்க்கப்பட்டேன். 1978-ஆம் ஆண்டு, அன்னையின் எந்தப் புத்தகங்களும் கிடைக்காமல் இருந்த சமயம் நான் அன்னையிடம் வேண்டிக்கொண்டது பின் வருமாறு: “ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு ஒரு மகேந்திரநாத் கிடைத்ததுபோல் உங்களுக்குத் தமிழ்நாட்டில் ஒருவர் கிடைக்கவில்லையா?” எனக் கேட்டேன். பின்னர் 1986ஆம் ஆண்டு நான் ஒரு பெரியவர் வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் அங்கு வந்த சீடர் ஒருவர் ‘‘அன்னையின் தரிசனம்’’ முதல் பாகம் புத்தகத்தை, கையில் வைத்திருந்தார். என் ஆவலைக் கண்ணுற்ற அவர் அப்புத்தகத்தை என்னிடம் கொடுத்துப் படித்துவிட்டுக் கொடுங்கள் என்றார். நானோ இப்புத்தகத்தின் அட்டையைக் காட்டுங்கள் போதும். நான் கடையில் வாங்கிக் கொள்வேன் என்று கூறி திருப்பிக்கொடுத்து விட்டேன். ஆனால் சென்னையிலும், மற்ற இடங்களிலும் அந்தப் புத்தகத்தை வாங்கச் சென்ற இடங்களிலெல்லாம் அப்புத்தகம் என் கைகளுக்குக் கிடைக்கவில்லை. பின்பு 1987- ஆம் ஆண்டு ஒரு நாள் என் அத்தை வீட்டிற்குச் சென்று அங்குத் தூங்கிக் கொண்டு இருந்தேன். திடீரென்று விழிப்பு வந்து பார்த்தபொழுது அருகில் “அமுதசுரபி”



பத்திரிகை இருந்தது. அதை எடுத்துப் படித்தபொழுது அதில் அன்னை பற்றிய கட்டுரையும், “எல்லாம் தரும் அன்னை” கிடைக்குமிடம் ஆகிய விவரங்களும் இருந்தன. அதன்படி திரு. வாசவன் அவர்கள் வீட்டிற்கு “எல்லாம் தரும் அன்னை” புத்தகம் வாங்கச் சென்றேன். அப்பொழுது அவர் என்னிடம் அன்னையை நான் எப்படி அறிந்தேன், என்ற விவரங்களைக் கேட்டார். நான் அவரிடம் அமுதசுரபியில் அன்னையைப் பற்றி எழுதியிருந்ததைப் படித்த விபரம், மற்றும் நான் அன்னையின் தரிசனம் முதற்பாகம் புத்தகத்தை ஒருமுறை கண்டது எல்லாவற்றையும் கூறினேன். அதற்கு அவர் அன்னை பக்தர்கள் வருந்தக்கூடாது என்று கூறி, அன்னை தரிசனம் புத்தகம் ஒன்றை எனக்கு விலைக்குக் கொடுத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்ட பொழுது எனக்கு ஏதோ என் அன்னையின் மடியில் தலையை வைத்து ஓய்வு எடுப்பதுபோலச் சுகமான உணர்வைப் பெற்றேன். அதே வருடம் செப்டம்பர் மாதம் என் நண்பர் ஒருவரின் குழந்தைக்கு மூளைக் காய்ச்சல் வந்துவிட்டது. நான் முதலில் அன்னையிடம் விஷயத்தைக் கூறிவிட்டுப் பின்னர் நண்பரின் குழந்தைக்குக் காய்ச்சல் அதிகமாகிவிட்டபடியால் எனக்கு அப்பொழுது தீட்சை கொடுத்த குருவிடம் சென்று விஷயத்தைக் கூறி என் நண்பனுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அந்த குரு “கர்மவினையைத் தீர்க்கமுடியாது. உனக்கென்றால் உதவ முடியும். மற்றவர்களுக்கு என்னிடம் கேட்காதே’’ என்றார். எனக்கு அப்பொழுது என் நண்பனின் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வுதான் இருந்தது. அந்தக் குருவிடம் அப்பொழுதே விடைபெற்றுக்கொண்டு வேலைக்குச் செல்லாமல் என் வீட்டிற்கு வந்து பூஜை அறையில் அன்னை முன் அமர்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தேன். “அன்னையின் தரிசனம்” புத்தகத்தில் கர்மவினையை அன்னை தீர்ப்பார் என “விதிக்கு விதி செய்யும் அன்னை” என்ற கட்டுரையில் படித்து இருந்தேன். அதை அன்னையிடமே கூறி நீங்கள் அந்தப் பையனின் கர்மவினையைத் தீர்க்க வேண்டும் என வேண்டினேன். பின்னர் நீங்கள் வாடாமல்லிகை இரண்டாகிலும் கடையில் வாங்கிப் பையனின் தலையருகில் வையுங்கள். ஒன்றும்

ஆகாமல் அன்னை காப்பாற்றி விடுவார் என்று கூறினேன். தினமும் பூ கொண்டுவரும் பெண்மணி அன்று கஸ்தூரிப்பூ கொண்டுவந்தார். அதைத் தட்டில் கொட்டிய பொழுது உடன் இரண்டு வாடாமல்லிகைப் பூக்கள் இருந்தன. அதே சமயம் இது சம்பந்தமாகப் பாண்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். பதில் கடிதமும், **blessing packet**-உம் வந்து சேர்ந்தன. அப்பொழுது என் நண்பர் பூக்கடைக்குச் செல்வதற்கு என்னிடம் சொல்லிவிட்டுப் போவதற்காக வந்தார். அவரிடம் அந்த இரண்டு வாடாமல்லிகைப் பூக்களையும், **blessing packet** ஐயும் கொடுத்து ஆஸ்பத்திரிக்குச் சென்று அந்தப் பையனிடம் கொடுங்கள் என்று கூறினேன். அப்பையன் சிறிது, சிறிதாகக் குணமடைந்து பத்துநாட்களில் ஓரளவு குணமடைந்தான். ஆனால், அவன் கை கால்கள் தக்க செயல்பாட்டுடன் இயங்கவில்லை. ஒரு மூன்று மாதங்கள் நண்பரும், அவர் மனைவியும் தொடர்ந்து அன்னையிடம் பிரார்த்தனை செய்தபின் நண்பர் மகன், பூரண குணமடைந்து இன்று நல்ல ஆரோக்கியத்துடன், இருக்கிறான்.

ஆசிரமம் சென்றேன். உள்ளே நுழைந்தவுடன் தாய் தன் குழந்தையை அரவணைக்க அழைப்பதுப்போல் என்னை அன்னை அழைத்தார். நான் உள்ளே சென்று சமாதியை நமஸ்கரித்து எழுந்தேன். அந்த ஸ்பரிசத்தை, யுகாந்த காலமாகத் தவித்த தவிப்பு என் ஆன்மாவிற்குக் கிடைத்த பரிசாகப் பாவித்து பெரு மகிழ்ச்சி கொண்டேன். எனக்கு இனம்புரியாத, செய்வதறியாத ஒரு சந்தோஷம் உள்ளிருந்து பொங்கி என் ஜீவன் முழுவதும் பரவியது. என் கண்களில் நீர்த்துளிகள் பனித்தன. நான் நிலையறியாத தடுமாற்றத்துடன் மீண்டும், மீண்டும் நமஸ்கரித்தேன். அதுவரை என் மனதில் கல்கத்தா பேலூரில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடத்திற்குச் செல்வது எனது குறிக்கோளாக இருந்தது. இந்த என் எண்ணத்தை மாற்றி எனது பழைய விஷயங்களை எல்லாம் ஒரு க்ஷணநேரத்தில் வெளியில் கொணர்ந்து என் ஆன்மாவைக் குளிப்பாட்டித் தூய்மைப்படுத்திய அந்த நேரம் எனக்கு இறைவன் வந்த தருணமாக அமைந்தது.



‘‘அன்னையின் தரிசனம்’’ புத்தகம் படித்தபின் அதை எழுதியவரை தரிசனம் செய்ய வேண்டும் என்று தீராத ஆர்வம் கொண்டு, பாண்டி சென்று ஆசிரமத்தில் அவர்களைப்பற்றி விசாரித்தேன். அங்கு யாரும் அவர் பற்றிய விவரங்களைக் கூறவில்லை. அன்னையின் அருள் என்ற புத்தகம் வெளியிடும் முகவரியில் அவரைப் பற்றி விபரம் அறிந்து அவரைச் சந்திக்கலாம் என நினைத்து அப்புத்தகத்தில் இருந்த 4, **Venkatta Nagar Extn**. என்ற முகவரிக்கு நடந்தே வந்தேன். அங்கு வந்தவுடன் அங்குள்ளவரிடம் விசாரித்தேன். அப்பொழுது அவர் பல கேள்விகளைக் கேட்டுவிட்டு **permission** வாங்கி என்னை உள்ளே அனுப்பினார்.

என் தங்கையைத் திருமணம் செய்து கொடுத்த இடத்தில் தங்கை மிகவும் கொடுமையை அனுபவித்து வந்தாள். மாமியார் கரித்துக்கொட்டி தொந்தரவு கொடுத்து வந்தார். நான்கு வருடங்களாக என் தங்கையும் எங்கள் வீட்டிற்கு வரவில்லை. மிகவும் மனம் வருந்தியிருந்த நேரத்தில், பகவான் திருவுருவப்படம் வந்தது. அதை வீட்டில் மாட்டிய நேரம் போன கரண்ட் திரும்ப வந்தது. அதேநேரம் தங்கையும், அவள் கணவரும் வந்தார்கள். **Aug. 15th** 1989 - ஆம் ஆண்டு நானும், தங்கை சங்கரியும் பகவான் பிறந்த நாளை முன்னிட்டுத் தரிசனத்திற்குப் பாண்டிச்சேரிக்குச் சென்று, தங்கைக்குக் குழந்தை பிறக்க அன்னை ஆசி வழங்க வேண்டினேன். சிறுவயதில் இருந்து அவளுக்கு இதயம் பலவீனமாக இருந்து வந்தது. கருத்தரித்தால் இதயத்திற்கு மேலும் பாதிப்பு ஏற்படும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். டாக்டர் கூறியபொழுதும், அவற்றை எல்லாம் அன்னையிடம் சமர்ப்பணம் செய்து வந்தோம். அதன்பிறகு **6th Sep** ’90 அன்று தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்தது. நான் ஸ்ரீ அன்னையிடம் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தபொழுது பகவானும் ஸ்ரீ அன்னையும் என் தங்கையின் இருபக்கங்களிலும் நின்றவாறு தங்கையின் இதயத்தை ஒரு கையாலும், தலையை மறுகையாலும் தொட்டபடி தங்களின் பொன்னொளியை அவள்

உடலைச் சுற்றி ஒரு வட்டமாக அமைத்து இருந்ததைத் தரிசித்தேன். ஆனந்தப் பரவசத்தில் சில நாட்கள் இருந்தேன். இதை, பாண்டிக்குக் கடிதம் மூலமாகத் தெரிவித்து என் நன்றியைக் காணிக்கையாக்கினேன்.

1990-இல் என் அக்காவின் கணவரிடம் வேலை செய்து கொண்டிருந்த வேலையாள் ஒருவர், அவருக்குத் தொந்தரவு கொடுத்து வந்தார். ஒழுங்காக வேலை செய்யும் தொழிலாளி ஒருவரிடம் சண்டை போட்டு அவரை விலக்கிவிட்டு, தானும் வேலை செய்யாமல் அவருக்குப் பிரச்சினை ஏற்படுத்திக் கொண்டிருந்ததை என்னிடம் அவர் தெரிவித்தார். நான் வழக்கம்போல் இதை ஸ்ரீ அன்னையால் மட்டுமே சரிசெய்ய முடியும் என்று எண்ணி, ஸ்ரீ அன்னையிடம் பிரச்சனையைச் சொல்லி "பொறுப்பை அவரிடம் விடுங்கள். உடனே சரியாகிவிடும்" என்றேன். மின்னல் வேகத்தில் செயல்பட்ட அன்னை மறுநாளே அந்தப் பிரச்சனைக்குரிய தொழிலாளியைத் தானே விலகச் செய்தார். யாரும் யாருடனும் பேச்சு நடத்தவில்லை. இந்த அற்புதம் அன்னையால் நிகழ்ந்தது. அன்றிலிருந்து அவர்கள் அன்னையை ஏற்றுக் கொண்டனர்.

1986-ஆம் ஆண்டு நாங்கள் ஒரு கம்பெனிக்கு **sub contractor** - ஆகச் செயல்பட்டு வந்தோம். எனக்குப் பார்ட்னராக இருந்தவர் மிகவும் முன்கோபக்காரர். எல்லோரையும் அடிக்கடி கடிந்து கொள்வார். எங்களிடம் வேலை பார்த்து வந்த ஆட்களுடன் சண்டைப் போட்டு அவர்கள் மனம் வருந்தும்படிச் செய்வார். இதனால் எல்லோருக்கும் மிகவும் சங்கடமாக இருந்தது. குறிப்பாக, எனக்கு பார்ட்னர் என்ற முறையில் மிகவும் கஷ்டமாக இருந்தது. இவர் விஷயத்தை அன்னைக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தி இருந்தேன். எனக்கு உடன் பதில் வந்தது. அதில் எனக்குக் கிடைத்த விஷயம் என்னவென்றால், பார்ட்னர் முன் கோபக்காரர் என்றால் அக்குணம் நம்மிடம் இருக்கிறது என உணர வேண்டும். அதே போல் அந்த பார்ட்னர் சண்டை சச்சரவுக்குக் காரணமாக இருந்தார் என்றால் அந்தக் குணம் நம்மிடம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு



செயல்பட்டால் விஷயம் மாறும் என்று இருந்தது. அதன்படி என்னுடைய பார்ட்னரின் குணங்கள் எல்லாம் என்னிடம் முழுமையாக அப்படியே இருக்கின்றன என்பதை உணர்ந்த அதே நிமிடம் அந்த பார்ட்னரின் பழக்க வழக்கங்களில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்குப் பின் அதே பார்ட்னருடன் 13 வருடங்களாகத் தொழிலில் ஈடுபட்டு வந்தேன்.

ஒரு முறை என் குடும்பத்தினர் எல்லோரும் திருப்பதிக்குச் செல்வதற்குக் கிளம்பியபொழுது என்னை மிகவும் வற்புறுத்தி அழைத்துச் சென்றனர். திருப்பதி சென்று, அங்கு நான் கோயிலுக்குச் செல்லாமல் **guest house** - இல் தங்கி இருந்தேன். திரும்பி ஊர் வந்தவுடன் மறுநாள் **factory**-க்குச் சென்றேன். அப்பொழுது பணி புரியும் இடத்தில் 20**mm** பெரிய சைஸில் உள்ள **plate** கிரேனில் தொங்கி கொண்டு இருந்தது. அதன் அருகில் நான் வேலை செய்து கொண்டு இருந்தேன். திடீரென்று, கிரேனில் இருந்த **plate** தனியே வெளியில் கழன்று வந்து கீழே விழுந்தது. அருகில் வேலை செய்து கொண்டிருந்த நான் எப்படி அங்கிருந்து நகர்ந்தேன் என்பது புரியவில்லை. என்னை அவ்விடத்திலிருந்து தப்பிக்க வைத்தது அன்னையின் அருளேயின்றி வேறில்லை.

திருப்பதி சென்று வந்த இரண்டாம் நாள் என் சின்ன மகனுக்குச் சீரியஸான நிலைமையில் **IC unit** - இல் **admit** செய்து இருந்தோம். டாக்டர்கள் 48 மணி நேரம் கழித்துத்தான் எதுவும் சொல்ல முடியும் என்று கூறினார்கள். கை, கால்கள் செயலற்று கோமா **stage**-இல் இருந்தான். நானும், எனது மனைவியும் சென்று அவனைப்பார்த்து அவன் மடியில் மகாகாளி **blessing packet** வைத்துவிட்டு வந்தோம். வைத்த உடன் 5 நிமிடம் கழித்து கண் விழித்து, **blessing packet** - ஐத் தானாகவே எடுத்து வைத்துகொண்டு சுய நினைவிற்கு வந்தான். டாக்டர் எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். டாக்டர் "நீங்கள் ஆசிரமம் போகிறவரா?" என்று கேட்டார். அந்தத் தெய்வத்தின் செயல்தான் உங்கள் பையனைக் காப்பாற்றி உள்ளது. நீங்கள்

பையனை அழைத்துச் செல்லலாம் என்று கூறினார். இந்நிகழ்ச்சியிலும் அன்னையின் கருணையால்தான் பையன் பிழைத்தான்.

எங்களுக்குச் சொந்தமான இடம் ஒன்று 3/4 கிரவுண்ட் இருந்தது. அதில் ஒரு வீட்டைக் கட்டி எனது தந்தையார் தன் நண்பரை குடியமர்த்தினார். வாடகை ஏதும் வாங்கவில்லை. நண்பரின் கஷ்டமான குடும்பச் சூழ்நிலை அவரிடம் வாடகை கேட்க என் தந்தை விருப்பப்படவில்லை. அப்பாவின் நண்பர் காலமானவுடன் அவர் மனைவியும், 3 மகன்களும், மருமகள்களும் அந்த வீடு தங்களுடையது என்று கூறி கோர்ட்டில் வழக்குப் போட்டனர். கடந்த 8 வருடங்களாக அந்த வழக்கு நீடித்தது. என் தந்தை 8 ஆண்டுகளாகப் பட்ட துன்பம் எழுத இயலாது. கோர்ட் தீர்ப்பு எங்களுக்குச் சாதகமானது. அவர்களைக் காலி செய்ய நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். வீட்டைப் பிரித்து கற்கள், ஓடுகள் கதவுகள் அனைத்தையும் அவர்களுக்கே கொடுத்துவிட்டோம். அப்படியும் அவர்கள் அந்தப் பொருள்களை அம்மனையின் முன்புறம் உள்ள ரோட்டில் போட்டுக்கொண்டு தொல்லை கொடுத்தனர். நாங்கள் காவலுக்குச் சென்றால் தங்கும் நோக்கோடு, எங்கள் செலவில் ஒரு குடிசையை அம்மனையில் கட்டினோம். நானும், என் தம்பியும் இரவில் அங்குத் தங்கிக் காவலிருந்தோம். அக்குடிசையில் இருந்த ஒரே ஒரு பொருள் ஸ்ரீ அன்னையின் படம் மட்டுமே. அவரே எங்களுக்குத் துணை. மனையைச் சுற்றி முள்வேலி போட்டோம். இப்படிக் காவல் தொடர்ந்தது. எல்லா விதங்களிலும் தோற்றும், அவர்கள் தங்கள் வெறுப்பை வெளிப்படையாகக் காட்ட 40 அடியாட்களை ஏற்பாடு செய்து ஒரு நாள் இரவு நானும், என் தம்பியிம் காவலுக்காக குடிசையில் உள்ளே இருந்தபோது எங்களைத் தாக்குவதற்குக் காத்திருந்தனர். இரவு 10 மணி அளவில் தாக்குதல் தொடர்ந்தது. அவர்கள் மனைக்கு வாராமல் ரோட்டில் நின்று கற்களால் எங்கள் குடிசையைத் தாக்கினர். சரமாரியான கற்கள் வந்து வீழ்ந்தபொழுது நாங்கள் இருவரும் வெளியே வந்தோம். மனம்



ஸ்ரீ அன்னையைப் பிரார்த்தித்துப் பாதுகாப்பு கேட்டது. ஸ்ரீ அன்னையின் மகத்துவத்தை நானறிவேன். ஆகவே மனத்தில் பயம் இல்லை. மழை பெய்வதுபோல் சாலையில் இருந்து கற்களால் தாக்கினார்கள். நிலைமை மோசமானதும் வேறு வழியின்றி நாங்களும் கற்களால் எதிர்த்துத் தாக்கினோம். எங்கள் மீது சுமார் 10, 12 கற்கள் வீழ்ந்தன. ஆனால் ஸ்ரீ அன்னையின் அருளால் ஒரு சிறு காயம்கூட ஏற்படவில்லை. இதைக் கண்ட எனக்கு ஸ்ரீ அன்னையின் அற்புதத்தையே நேரில் காண ஒரு வாய்ப்பு ஏற்பட்டது என எண்ணினேன். பின்னர் அவர்கள் சற்று ஓய்ந்து திரும்பினார்கள். நாங்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தகவல் கொடுத்தோம். அப்போது அங்கு எதிரியின் வக்கீல் இருந்தார். அவர்கள் திட்டம் புரிந்தது. அவர்கள் தாக்கிவிட்டு நாங்கள் தாக்கியதாகப் புகார் கொடுக்க வக்கீலுடன் முன்னேற்பாடாக வந்துள்ளனர். வழக்கின் தன்மையையும், பதட்டமான சூழ்நிலையையும் புரிந்துகொண்ட போலீஸார், அவர்கள் பக்கத்தில் 3 பேர்களை கைது செய்து பாதுகாப்பில் வைத்தனர். எங்கள் இருவரையும் கூட பாதுகாப்பில் வைத்துவிட்டனர். சிறைக்குள் இருந்த போது என் மனம் “எனக்கு ஏன் இந்த நிலை” என்று கதறியபோதிலும், இது அவமானமாகப் பட்டபோதிலும் ஸ்ரீ அன்னையை வேண்டி வந்தேன். கண்களை மூடினால் புருவ மத்தியில் ஒளி வெள்ளத்தில் ஸ்ரீ அன்னை தோன்றுகிறார். “என்ன செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும். நீ சும்மா இரு” என்று கூறுவார்கள். நான் என் அண்ணன் வந்து என்னை விடுவிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்தேன். பொழுது விடிந்தது. விவரமறிந்த என் குடும்பத்தினர் வந்து கூடி விட்டனர். போலீஸார் யாரையும் சந்திக்க அனுமதிக்கவில்லை. சரியாக 1 மணி அளவில் என் அண்ணன் தன் நண்பருடன் போலீஸ் ஸ்டேஷன் வந்தார். அவர் பேச்சைக் கேட்டு அதன் பின் என்னை விடுவித்தனர். எதிராளிகளையும் எச்சரித்து, போலீசார் விடுவித்தனர். அத்துடன் அவர்கள் தொல்லை தீர்ந்தது. ஆனால் மனதுக்குள் மட்டும் எனக்கு ஏன் இந்த அவல நிலை என்று கேள்வி எழுந்து கொண்டே இருந்தது.

மறுநாள் என் பிறந்த தினம், ஆகவே பாண்டி சென்று ஸ்ரீ அரவிந்தர் அறையைத் தரிசித்து பிரசாத பாக்கெட் வாங்கி வந்தேன். மனம் அமைதி அடைந்தது. உறவினர்கள் உன் தெய்வம் இப்படிச் செய்து விட்டதே என்று கூறினார்கள். அதற்கு நான் "முன்பைவிட இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீ அன்னையிடம் திடமான பக்தியும், நம்பிக்கையும் கோடி கோடி மடங்கு பெற்றேன்" என்று உண்மையான என் மனநிலைமையைக் கூறினேன். ஏனென்றால் எதிரிகளின் தாக்குதலுக்கு மீண்டும் ஆளாகும் அபாயத்தை விலக்கி **police lock-up**-இல் நானோரிரவு இருப்பதுதான் எனக்குச் சிறந்த பாதுகாப்பென்று அன்னையே முடிவுசெய்து என்னை உள்ளே வைத்ததாக என் மனதிற்குப் பட்டது.

சென்னையில் தி.நகரில் 1995 மார்ச் மாதத்தில் சொசைட்டியால் பொது தியான மையம் ஆரம்பித்த பொழுது எனக்கு அங்குச் சேவை செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அப்படிக் கிடைத்த வாய்ப்பு எனக்கு அன்னை தந்த அரிய பொக்கிஷம். தினமும் காலை 6 மணிக்குத் தியானமையத்தைத் திறந்து சுத்தம் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஒவ்வொரு தினமும் அன்னைக்குச் செய்யும் சேவை அன்றைய தினத்திற்குரிய புத்துணர்ச்சியை எனக்கு அளித்துக் கொண்டிருக்கிறது. இனம் புரியாத தேடுதலில் அலைந்து கொண்டிருந்த எனக்கு அன்னை என்ற மந்திரச் சொல் என்னை நின்று திரும்பிப் பார்க்க வைத்தது.

- S. கண்ணன், சென்னை

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

காரியம் முடிந்து வெகுநாளான பின் எப்படி முடிந்தது என்று தெரிவதில்லை. ஆனால் காரியம் ஆரம்பிக்கும் முன் எப்படி முடியும் என்றறிய அவா எழும்.



**"அன்னை இலக்கியம்''**

# தாயம்மாள்

இல. சுந்தரி

காலை 11-மணி சுமாருக்கு வழக்கம்போல் தாயம்மா தயிர்க்கூடையுடன் கோமுட்டித் தெருவிற்குள் நுழைந்து வாடிக்கையாளர்கள் வீட்டிற்கு வரிசையாய்த் தயிரோ, மோரோ கொடுத்துக்கொண்டு வருகிறாள். டாக்டர் **(L.M.P.)** சத்தியநாராயண செட்டியார் வீட்டில் கூடையை இறக்கி "டாக்டரம்மா" என்று குரல் கொடுத்தாள். டாக்டரின் மனைவியை இவள் இப்படி அழைப்பது வழக்கம். "இதோ வந்துட்டேன் தாயம்மா. கடிகாரமே பார்க்க வேண்டாம். தாயம்மா வந்தால் மணி 11" என்று சொல்லியவண்ணம் மோர் வாங்கும் பாத்திரத்துடன் வந்தாள் ரெங்கநாயகி. எதைப் பார்த்தாலும் என்னவென்று கேட்காமல் இருக்கமுடியாத ஒரு குணம் அவளுக்கு. "என்ன தாயம்மா? இரண்டு பானைகள்தானே கொண்டு வருவே ஒண்ணு தயிரு, ஒண்ணு மோரு. புதிதாக ஒரு கலயம் எதுக்கு? மோரும் தயிரும் கலந்த கலப்படமா? என்றாள். "இது இஸ்பெசல் தயிறு" என்றாள் தாயம்மா "இஸ்பெசலா? அது என்ன ஸ்பெஷல்?" என்றாள் ரெங்கநாயகி. செட்டியார் சம்சாரம் எங்க குலதெய்வத்துக்கு நேந்துகிட்டு தினமும் தயிர் நேவித்தியம் வைக்குது. அதுக்குத்தான் இந்த தயிர்" என்றாள் தாயம்மா.

'எதுக்காக நேந்துகிட்டாங்களாம்?' என்றாள் ரெங்கநாயகி. ''கிருஷ்ணன்சாமியாண்ட என்ன நேந்துக்குவாங்க எல்லாம் புள்ளவரம்தான்" என்றாள் தாயம்மா இயல்பாக. "ஏதேது செட்டியார் சம்சாரம் புள்ளவரம் வேண்றாங்களா?" என்று ஏளனமாய்க் கேட்டாள். "ஏன் டாக்டரம்மா அப்படி கேக்குற. செட்டியார் சம்சாரத்துக்குப் புள்ள பொறந்தா ஆவாதா?" என்று அவள் நொடிப்பைத் தன் வினாவால் வீழ்த்தினாள் தாயம்மா. "அது சரி" என்றவண்ணம் உள்ளே சென்றாள் ரெங்கநாயகி. செட்டியார் பொஞ்சாதி தங்கம்.

அதும் மனசுக்கு அதுக்குப் புள்ள பொறக்காம போகுமா? எங்க குல (இடையர்குல) தெய்வம் அதும் பிரார்த்தனையை நெறவேத்தாம போவுமா! என்று பொருமியவண்ணம் கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாள். அடுத்தது சங்கர் செட்டியார் வீடு.

'செட்டியாரம்மா! தயிர் கொணாந்திருக்கேன்', என்று சப்தமிட்டு அழைத்துக்கொண்டே கூடையை இறக்கித் திண்ணையில் வைத்து விட்டு தலைச் சும்மாட்டைக் கீழே வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

செட்டியார் மனைவி இரண்டு பாத்திரங்களுடன் உள்ளிருந்து வெளிப்பட்டாள்.

"இந்தா தாயி. நீ சாமிக்கு நேந்துகிட்டேனதும் நானும் பயபக்தியா தனியா ஒரு சட்டியிலே ஒரையூத்தி கொணார்ந்திருக்கேன். ஒன் தவம் பலிக்கனும். எங்க சாமி ஒங்க வூட்ல வந்து பொறக்கணும். நா கண்குளிரப் பாக்கணும்'' என்று அளவு கடந்த ஆர்வத்துடன் கூறினாள். குற்றமற்ற குலம் இடையர் குலம் என்பது எவ்வளவு உண்மை.

மோரை அலுமினியப் பாத்திரத்திலும், தயிரை வெள்ளிப் பேலாவிலும் வாங்கிக்கொண்ட செட்டியார் மனைவி, இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு எனக்குக் குழந்தை பிறக்கும் என்று இவள் கற்பனை செய்கிறாள். உண்மையில் நான் பிள்ளைவரம் வேண்டியா விரதமிருக்கிறேன்? வந்திருக்கும் ''அதிதி'' வெளியுலகிற்குத் தெரியக்கூடாது என்பதால் அதிகப்படி தயிர் வாங்குவதற்கு ஒரு காரணமாக கடவுளுக்குப் படைப்பதற்கு என்று ஒரு பொய் சொன்னேன். இதை இவள் இவ்வளவு அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள் என்று எண்ணியவாறு உள்ளே சென்றாள்.

தாயம்மாவின் கற்பனை செட்டியார் மனைவியையும் தொற்றிக் கொண்டது. அப்படியொரு சின்னக் கண்ணன் இந்த வீட்டில் தவழ்ந்தால் எப்படியிருக்கும் என்றெண்ணியபோதே நினைவு இனித்தது. இல்வாழ்வில் புகுந்த பெண் ஒரு பிள்ளைச் செல்வத்தை எதிர்பார்ப்பதில் தவறென்ன இருக்கிறது? ''மங்கலம் என்ப



மனைமாட்சி, மற்றதன், நன்கலம் நன்மக்கட் பேறு" என்று வள்ளுவர் சொல்லவில்லையா? பொன் அரைஞாணும், பூந்துகில் ஆடையுமாய்ப், பொற்சதங்கை ஒலிக்கத் தவழ்ந்து வந்து குழந்தை காலைக் கட்டிக் கொண்டதுபோல் ஒரு பிரமை. முகம் பிரகாசித்து மெய்மறந்து நின்றாள் செட்டியாரின் மனைவி. மாடியில் பகவான் புன்னகை புரிந்தார்.

உண்மையில் இவர்கள் வீட்டிற்குச் சிலர் வந்திருக்கின்றனர். அன்றிரவு ஏழு மணியிருக்கும், மாலை மறைந்து இருள் தொடங்கிவிட்டது. செட்டியார் பரபரப்பாய் இருந்தார். மனைவியை அழைத்து, "இங்கு முக்கியமான ஒருவர் வரப் போகிறார். மேலே மாடியிலே அவருக்கு அறை ஒதுக்கியிருக்கிறேன். அவர் இங்குதான் தங்கப் போகிறார். அவர் இங்கிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது. பெண்களிடம் ரகசியம் தங்காது என்பார்கள். இதை நீ வெளியிட்டால் நமக்குத் தெய்வக்குற்றம் வந்து சேரும்" என்றார். பணிவுடன் ஏற்றுக் கொண்டாள் செட்டியாரின் மனைவி. "போ, நீ உள்ளே போ" என்று அவளை உள்ளே அனுப்பிவிட்டு வெளியே வருபவரை வரவேற்கச் சென்றார். வருபவரைக் காணும் ஆவலுடன் சமையலறை ஜன்னல் வழியே பார்த்துக்கொண்டு நின்றாள். நான்கைந்து பேர் வருகிறார்கள். நடுநாயகமாய் வந்தவர்தாம் முக்கியமானவர்போலும். வேட்டியை மூலக்கச்சம் வைத்துக் கட்டியிருந்தார். முழுக்கை ஜிப்பா அணிந்திருந்தார். மேலே குறுக்காக ஒரு துண்டு அணிந்திருந்தார். குறுந்தாடி வைத்திருந்தார். பின்புறம் அலையலையாய் சிகை கழுத்துவரை நீண்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஏதோ தெய்வீகமானவர் என்று காண்போர் புரிந்து கொள்ளும்வண்ணம் கண்களில் அசாதாரண ஒளி. இத்தனைக்கும் அக்காலத்தில் அவரை ஓர் ஆன்மீக மனிதராகக் கூட யாரும் அறிந்திருக்கவில்லை.

மேலே தங்கியிருக்கும் ரகசிய விருந்தாளிக்கு அதிகப்படி தயிர் வாங்கினாள். தாயம்மா நீண்ட காலமாய் தயிர் கொடுப்பவள். சிறிது அதிகப்படி வாங்கினால்கூட ''யாரு விருந்தாளி?'' என்பாள். உண்மையைச் சொல்லமுடியாத நிலையில் ஸ்ரீகிருஷ்ணருக்கு

நிவேதனம் செய்வதாய் நேர்ந்து கொண்டதாய்ச் சொன்னாள். அதைத் தாயம்மா தன் கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்தில் பெரிய சித்திரமாய்த் தீட்டிவிட்டாள்.

மேலேயுள்ள விருந்தினர்க்கு மிக அக்கறையுடன் சிரத்தையுடன் சமைத்தாள். தயிரை மட்டும் ஒரு வெள்ளிப் பேலாவில் பத்திரமாக அனுப்புவாள். கடவுளுக்கு நிவேதனம் என்று தாயம்மாவிடம் சொன்னது பொய்யாகக்கூடாது என்பதால் மானசீகமாய் ஸ்ரீகிருஷ்ணர் ஆவலுடன் அத்தயிரை உண்பதுபோல் கற்பனை செய்துகொள்வாள். மேலே போகும் ரசம், குழம்பு, கூட்டு, பொரியல் யாவும் உண்ணப்பட்டிருக்கும். தயிர்மட்டும் மீதம் திரும்பி வரும். ஒரு நாள் மேலேயிருந்தவர்களில் ஓரிளைஞர் கீழே வந்தபோது செட்டியார் மனைவி அவரிடம் சாப்பாடு நன்றாக உள்ளதா என்று பிரியமாய்க் கேட்க, அவரும் வித்தியாசமான தமிழில் ரொம்ப நல்லாயிருக்கு என்றார். தயிர் ஏன் மீந்துவிடுகிறது போட்டுக் கொள்வதில்லையா? என்று கேட்டதற்கு தாங்கள் யாவரும் தயிர் உண்ணும் பழக்கமில்லை யென்றும், அவர் (முக்கியமானவர்) மட்டும் அன்புடன் அளித்ததை உண்ணாதிருக்கக் கூடாது என உண்பதாகக் கூறினார்.

ஸ்ரீ கிருஷ்ணருக்கு மானசீகமாய்க் படைத்தது என்பதால் அந்த மீதித் தயிரை இவள் தவறாது உண்பது வழக்கம். அடிக்கடி இவள் கற்பனையிலும் கனவிலும் கூட கண்ணன் தவழ்ந்தான். இவள் நெஞ்சு நிறையும்வண்ணம் சிரித்தான்.

தாயம்மா, ''ஏதேனும் விசேஷமுண்டா?'' என்று கேட்கத் தொடங்கிவிட்டாள். கல்யாணமாகி எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? முப்பது வயதுக்குமேல் பிள்ளைப் பேறா? அவளுக்கு வெட்கமாயிருந்தது. ''என்ன தாயம்மா இது? இத்தனை வயதிற்குமேல் உண்டாக முடியுமா?'' என்றாள்.

"ஏன் தாயி அப்பிடி சொல்லுற. எங்க குலதெய்வம் நம்புறவங்கள, நல்லவங்கள ஏமாத்தாது. உனக்காக இல்லாங்காட்டியும், தெனமும் பத்தியா தயிர் கொணாந்து தர்ரேன்னே எனக்காகவாச்சும் ஒன்



வீட்ல என் சாமி வந்து பொறக்கும் பாரு. சாமியை வேண்டிக்கினா நம்பிக்கை வேணும். எங்க கொலத்து சனங்களப் பாரு. ஒரு கொறையில்லாம இருக்கோம்" என்று கூறிச் சென்றாள்.

தாயம்மாவைப்போல் கள்ளமில்லாத உள்ளங்களுக்குத்தான் கடவுள் புலப்படுவார் என்றெண்ணிக் கொண்டாள் செட்டியார் மனைவி.

சில மாதங்களில் இரவோடிரவாக வேறு வீடு மாறிச் சென்று விட்டனர் அந்த விருந்தினர். போகும்போதும் அந்தப் புனிதரின் பார்வையை செட்டியாரின் மனைவி தரிசித்தாள். திடீரென தன் கனவிலும், கற்பனையிலும் வரும் ஸ்ரீ கிருஷ்ணர் முகம்போல அவர் முகம் தோன்றியது. உடம்பு சிலிர்த்தது. வீடு வெறுமையானது. நாளையிலிருந்து அந்தப் புனிதருக்கு உணவு படைக்கும் பாக்கியம் இல்லை என்ற ஏக்கம் எழுந்தது.

மறுநாள் காலை, செட்டியார் இவளிடம், "சாமி வீதியுலாவுக்கு வெளியே சென்றதும் கோயில் வெறிச்சென்றிருக்கும் அதுபோலல்லவா இருக்கிறது?" என்றார்.

"எனக்கும் சமையல் செய்ய ஆர்வமாய் இல்லை" என்றாள் அவர் மனைவி.

''இன்றுமுதல் நிவேதனத்தயிர் வேண்டாம்'' என்றாள் தாயம்மாவிடம்.

"ஆறு மாதம் நேந்துக்கினியா தாயி" என்றாள் தாயம்மா.

வேறு வழியில்லாமல் 'ஆமாம்' என்று சொல்லி வைத்தாள் செட்டியார் மனைவி. இரண்டு மாதம் கழித்து செட்டியார் மனைவி மயக்கமடைந்தாள். திடீரென கீழே விழப் போனவளை அவளுடன் பேசிக்கொண்டிருந்த செட்டியார் பதறிப்போய் கீழே விழாமல் பிடித்து படுக்கையில் சாய்த்தார். பக்கத்து வீட்டு அம்மாவை அழைத்து துணைக்கு வைத்துவிட்டு நான்கைந்து வீடுகள் தள்ளியிருக்கும் டாக்டர் சத்தியநாராயணனை அழைத்து வந்தார். அக்காலங்களில்

கார், டோக்கன், க்கியூ என்ற பந்தாக்களில்லை. தெருவிற்குப் பத்து டாக்டர்களிலர். நோயாளிகளும் இலர். செட்டியார் தம் தெருக்காரர் என்பதால் அழைத்தவுடன் டாக்டர் வந்து விட்டார்.

''ஏன் இப்படி நேர்ந்தது? என்ன செய்தாள்?'' என்று செட்டியாரிடம் டாக்டர் விசாரித்தார். பேசிக்கொண்டே நின்றவள் திடீரென மயங்கி விழப்போனாள், என்று கூறினார் செட்டியார். மனைவிக்கு என்ன நோயோ என்று கலங்கி நின்றிருந்தார்.

நாடியைப் பிடித்துப் பார்த்த டாக்டர், 'செட்டியாரே உம் மனைவியின் விரதம் பலித்துவிட்டது' என்று குறும்பாய்ச் சிரித்தார். 'என்ன சொல்கிறீர்கள்' என்று விழித்தார் செட்டியார். 'சரிதான் உம் மனைவி பிள்ளை வரம் வேண்டி ஸ்ரீகிருஷ்ணருக்குத் தயிர் நைவேத்யம் செய்த கதை தெரியாதா உமக்கு?' என்றார். 'சரி, நீர் அப்பாவாகப் போகிறீர். மனைவியை நன்றாய்க் கவனியும்', என்று டானிக் எழுதிக் கொடுத்துவிட்டு ஊசியும் போட்டுவிட்டுப் போனார். செட்டியாருக்கு ஒன்றும் புரியவில்லை. வியப்பு ஒருபுறம், மகிழ்ச்சி ஒருபுறம்.

அவள் விழித்தெழ நெடுநேரம் ஆகிவிட்டது. செட்டியார் தூக்கமும், விழிப்புமாய்க் காத்துக் கிடந்தார். திடீரென விழித்தவள் "மணி என்ன? நான் ஏன் படுத்திருக்கிறேன்! சாப்பிட நேரமாகி விட்டதா?" என்றாள். "சாப்பிடும் நேரமெல்லாம் தாண்டிவிட்டது. இந்தா இந்தப் பாலைக் குடி சற்றுத் தெம்பாக இருக்கும்'' என்று பரிவுடன் கொடுத்தார் செட்டியார். "நல்லாயிருக்கு நீங்க எனக்குப் பணிவிடை செய்யறது'' என்று வெட்கத்துடன் எழுந்திருக்கப் போனாள்.

"நீ இப்ப எழுந்திருக்க வேண்டாம். உனக்கு ஓய்வு வேண்டும் என்றார் டாக்டர்'' என்றார் "டாக்டரா? எனக்கு என்ன உடம்புக்கு? நான் நன்றாகத்தானேயிருக்கிறேன்'' என்றாள். ''சரிதான் நீ ஸ்ரீகிருஷ்ணரை வேண்டிக்கொண்டது டாக்டருக்குத் தெரிந்திருக்கிறது. எனக்குத் தெரியவில்லையே" என்றார் செட்டியார்.



செட்டியார் மனைவிக்கு மிகவும் வெட்கமாய்ப் போய்விட்டது. ''அதெல்லாமில்லீங்க மாடியில் தங்கி இருப்பவரை யாரும் அறியக்கூடாது என்றீர்களா அவருக்கு வாங்கும் தயிரை எதற்கு என்று தாயம்மா கேட்டாள். உண்மையைச் சொல்ல முடியாமல் ஸ்ரீகிருஷ்ணருக்கு நைவேத்யம் என்றேன். தாயம்மா தானே பிள்ளை வரம் என்று கற்பனை செய்துகொண்டு தெருப்பூரா சொல்லி விட்டாள்'' என்றாள். 'கள்ளமில்லாதவள் சொல்லல்லவா? பலித்து விட்டது', என்றார் செட்டியார்.

'என்ன சொல்றீங்க?' என்றாள் இன்ப அதிர்ச்சியுடன். 'நான் அப்பாவாகப் போகிறேன். நீ அம்மாவாகப் போகிறாய்' என்றார். 'எனக்கொரு கதை நினைவுக்கு வருகிறது. பழங்காலத்தில் வீரசைவர்களுக்கு ஓரிடத்தில் பந்தி போஜனம் நடைபெற்றதாம். பசி மிகுதியால் ஒருவன் அந்தக் கூட்டத்தில் புகுந்தானாம். ஒவ்வொருவர் கழுத்திலும் ஒரு கயிற்றில் வெள்ளைத் துணியில் ஏதோவொன்று சுற்றி கட்டித் தொங்கியதாம். அது இன்னதென தெரியாத இவன் ஒரு கத்தரிக்காயை வெள்ளைத் துணியால் கட்டி கழுத்தில் தொங்கவிட்டுக்கொண்டு வரிசையில் நின்றானாம். உள்ளே பந்தியில் உட்கார்ந்தவுடன் ஒவ்வொருவரும் கழுத்திலுள்ள வெள்ளைத் துணியால் சுற்றிய சிவலிங்கத்தைப் பிரித்தெடுத்து மகேசுவர பூஜைக்காக இலைக்கு முன் வைத்தனராம். அப்போதுதான் இவனுக்குத் தோன்றியதாம், "கடவுளே என்னை மன்னித்துக் காப்பாற்று" என்று வேண்டியவண்ணம் கழுத்துக் கயிற்றில் தொங்கிய வெள்ளைத்துணியைப் பிரித்தபோது கத்தரிக்காய் லிங்கமாக மாறியிருந்ததாம். நீயும் ஊரார் முன் தலைகுனிய வேண்டாமெனக் கடவுள் வரம் தந்துவிட்டார்'.

உண்மையைச் சொல்லக்கூடாது என்று ஒரு பொய் சொன்னாள். பொய்யை மெய்யாகத் திருவுரு மாற்றம் செய்ய வந்தவரல்லரோ பகவான். தம்பொருட்டு செட்டியாரும் அவர் மனைவியும் மேற்கொண்ட பொய்யை மெய்யாக்கிவிட்டார்.

❋ ❋ ❋

**"அன்பர் உரை''**

**வயிற்றுப் பிழைப்பைத் தேடுவது-கடைநிலை வாழ்வு**

**வசதியையும் அந்தஸ்தையும் தேடுவது-சாதாரண சமூக வாழ்வு**

**முன்னேற்றத்தை நாடுவது - ஆக்கபூர்வமான வாழ்வு**

**திருவுருமாற்றத்தை நாடுவது-ஆன்மீக வாழ்வு**

*(27.6.99 அன்று சென்னை-பெரம்பூர் ''ரிஷி இல்லம்'' தியான மையத்தில் திருமதி உஷா ராமதாஸ் நிகழ்த்திய உரை)*

எந்த நிலையில் மனிதனிருந்தாலும் அவன் முன்னேறிக் கொண்டேயிருக்கிறான். அவனது ஆன்மீக முன்னேற்றம் அடுத்த ஜன்மங்களில் தெரியும். அவனது சமூக முன்னேற்றம் அடுத்த தலைமுறைகளில் தெரியும். அன்னையை ஏற்றபின் முயற்சியுடைய நல்லெண்ணத்திற்கு எந்த நிலை முன்னேற்றமும் இந்தப் பிறப்பிலேயே பலன் தரும். பொதுவாக அன்னையை நாடியவர்கள் 10 ஜன்மப் பலனைப் பெற்றதாக அன்னை கூறுகிறார்.

சிஷ்யர்களைப் பற்றிப் பேசும்பொழுது ஸ்ரீ அரவிந்தர் சிஷ்யர்களால் தொந்தரவு மட்டுமே வரும் என்கிறார். அதுவே உண்மையானால் சிஷ்யன் வாழ்க்கையில் எப்படிப் பலன் பெறுவான் என்பது கேள்வி.

கடைநிலை வாழ்வு என்பதை இன்று 5000 ரூபாய்க்குக் குறைந்த வருமானமெனக் கொள்வோம். சாதாரண சமூக வாழ்வை 30,000 ரூபாய் மாதவருமானமாக எடுத்துக் கொள்வோம். இது ஒரு டெய்லர் சம்பாதிக்கும் தொகை. ஆக்கபூர்வமான வாழ்வு என்பதை ஒரு தொழில் நடத்தி வெற்றி பெற்றவர் என்றால், அன்பர்கள் எந்த நிலையிலிருந்தாலும் முழு முயற்சி செய்தவுடன்,



அடுத்த நிலைக்கு உடன் வருவார். யோகத்தை ஏற்று பகவான் திருவடியை நாடியவர் வாழ்வில் எவ்வளவு முன்னேற்றம் பெறுபவரானாலும், யோகத்தை ஏற்றபின் அவருடைய ஆன்மீக அம்சம் பகவானுக்குத் தொந்தரவாக அமையும். அதுவும் வாழ்வைப் பொருத்தவரை வளமாக அமையும் என்பதே முக்கியம். அவரும் திருவுருமாற்றத்தை நாடினால் அவர் வாழ்வு திருவுருமாறும்.

ஆன்மாவும், மனமும், உணர்வும், செயலும் திருவுருமாற முயல்பவர்கள் எந்த நிலையிலிருந்தாலும் வாழ்வின் உச்சகட்டத்தை அடைவர். யோகத்தை நாடுபவர்களை நாம் இங்குக் கருதவில்லை. அத்திருவுருமாற்றத்தை மேற்சொன்ன நிலைகளுக்குரிய உருவங்கள் எவை என விவரிப்போம்.

தலைப்பில் கூறியவற்றில் உள்ளவர்கள் மனநிலைகளை நாம் அறிவோம்.

> **''அன்னையிடம் வந்தபின் நாங்களும் மனிதர்கள்தாம், நமக்கும் வாழ்வுண்டு என்று தோன்றுகிறது''** என **வாழ்வில்லை என ஏற்றுக்கொண்ட கடைநிலை மக்கள் கூறுகிறார்கள்.**
>
> **''எங்கள் பையனும் ஏர்க்காடு பள்ளியில் படிக்கிறான் என்று நம்பமுடியவில்லை.''**
>
> **''நாங்கள் எங்கே? அமெரிக்கா எங்கே? எங்கள் வீட்டு மனிதர்களும் அமெரிக்கா போய் வேலை செய்கிறார்கள் என்பதை போனபின்னும் நம்பமுடியவில்லை.''**
>
> **''எங்களுக்கெல்லாம் B.A மாப்பிள்ளை ஏது?''**
>
> **''நாங்களும் டவுன் உள்ளே குடியிருப்போம் என கனவும் கண்டதில்லை''.**

அன்னையிடம் வந்தபின் நிலைமை மாறுகிறது. ஆச்சரியம் எழுகிறது.

**எந்த விஷயத்தில் மனம் முதலிலேயே நம்பிக்கை கொள்கிறதோ அந்த விஷயத்தில் அன்னை நம் நம்பிக்கை மூலம் நிலைமையை மாற்றுவார். நமக்கு அனுபவத்தால் நம்பிக்கை வருகிறது. அதற்குப் பதிலாக நம்பிக்கையால் அனுபவம் வரவேண்டும்.**

சமூகம் மாறுவதால் மேற்சொன்ன நல்ல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அன்னை சக்தி உலகில் வந்தபின் அதை அறிந்து நம்புபவர்கட்கு உச்சகட்ட மாறுதல் உண்டு. நாம் எந்த நிலையிலி ருந்தாலும் எந்த நிலைக்கும் போகலாம், உச்சகட்டம் நம்மை எதிர்கொள்ளும். நம் பங்கு,

நல்லெண்ணம், நம்பிக்கை, முயற்சி.

10 தலைமுறைகளாகக் கூலிக்காரராகவே இருப்பவர், குமாஸ்தாவாகவே உள்ள குடும்பம், ஆரம்ப ஆசிரியராகவே உள்ளவர் குடும்பங்களை நாம் அறிவோம். மற்ற குடும்பங்கள் படித்து, உயர்வதைப்போல் இக்குடும்பங்கள் படிப்பதில்லை, உயர முன் வருவதில்லை. சமூகம் தரும் வாய்ப்பை இவர்கள் பயன்படுத்து வதில்லை. அன்னை தரும் வாய்ப்பை எவரும் இதுவரை அறியவில்லை. அன்னையைத் தெய்வமாக மட்டும் வழிபட்டால் அவருடைய புதிய அம்சங்களைத் தெரிந்து கொள்ள முடியாது. அன்னையை அறிவது முக்கியம். அறிபவர் அன்னையின் சக்தியால் உயரப் பிரியப்பட்டால் அவருக்கு உயர்வுண்டு.

சமூகத்தால் முன்னுக்கு வர உடலுழைப்பு, அறிவு தேவை.

அன்னையால் முன்னுக்கு வர நம்பிக்கையும், நல்லெண்ணமும் தேவை.

எந்த நிலையிலிருந்தாலும் முன்னேற்றத்தை நாடுபவர் குறைவு. பெறுபவர் மிகக் குறைவு. சமூகம் கட்டாயப்படுத்தினால்தான் பெரும்பாலோர் முன்னேறுவார்கள். 250 ஆண்டுகட்கு முன் பள்ளிப் படிப்பு வந்தது. இன்றும் பள்ளிக்குப் போகாதவருண்டு. சர்க்கார்



படிக்க கட்டாயப்படுத்துகிறது. நாம் 250 ஆண்டுகள் காத்திருக்கப் போகிறோமா? அல்லது இன்றே முயன்று பலன் பெறலாமா என்பதே கேள்வி.

நாம் திருவுருமாற்றத்தை நாடினால் நம் திறமைக்கேற்ப ஆக்க பூர்வமான முன்னேற்றமோ, சமூக அந்தஸ்தோ வரும். இன்றுள்ள மனநிலைகளையும், அன்னை அளிக்க முன்வரும் நிலைகளையும் சில அனுபவங்களையும் காண்போம்.

* நான் அன்னையை ஆன்மீக முன்னேற்றத்திற்காக நாடி வந்தேன். எனக்கு பணமோ, அந்தஸ்தோ தேவையில்லை என்பது ஒரு வகை. இப்படிப் பேசுபவர் உண்மையாக இருந்தால் அது பெரிய மனநிலை. அவர் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பெரும் பணமும், தொடர்ந்த பிரபலமும் இவரை நாடி வரும்.

  நம்மால் முடியாததை வேண்டாம் என்று கூறும் மனப்பான்மையிது. இவர்கள் வாழ்வை கவனித்தால் சொல்லுக்கு எதிரான பழக்கமிருக்கும்.

* சமூகம் அளவுகடந்து முன்னேறியபின், முதல் நிலையிலேயே தங்கியவர்களை நாம் காண்கிறோம். அதேபோல் அன்னையிடம் வந்தபின் அம்மனநிலையுள்ளவர்கள் சொல்லும் சொல் இது.

* முயற்சிக்குப் பயப்படுவது உண்டு. பெரியதை நாடி முயன்றால் சிறியதற்கு ஆபத்து வரும். இருப்பதைவிடாமல் பெரியது வாராது. விடமுடியாதவர்க்கு முயற்சியிருக்காது. முயற்சியிருந்தாலும் பலனிருக்காது.

* ஒரு T.V. பேட்டி, பத்திரிகையில் கட்டுரை எழுதுவது, பெரிய இடத்து விசேஷத்திற்கு அழைப்பு, போன்றவை சிறு நிகழ்ச்சிகள். ஒருவருக்கு இவை போன்றவை கிடைத்தவுடன் வரும் பரபரப்பு ஊர் முழுவதும் பரவும். அன்னை சொந்த T.V., சொந்த பத்திரிக்கையை அளிக்கிறார். உன் நிலைமையை

பெரிய இடமாக்குகிறார். அது வேண்டாம் என வாய் கூறும்பொழுது, மனம் பேட்டியையும், கட்டுரையையும், அழைப்பையும் நாடித் துடிப்பது உண்மை.

**உண்மையை ஏற்றுப் போலியை விட்டால் அன்னையுண்டு.**

* ரூ 100 சம்பாதிப்பவர் சேவையில் சேர்ந்து அற்புதமாக நடந்து உயர்ந்தபொழுது அவர் ஸ்தாபனம் அடுத்த நிலைக்குப் போக இவர் ஒத்துழைப்பை நாடி "ஆண்டுக்கு ஒரு லட்சரூபாய் தருகிறோம். ஸ்தாபனத்தைப் பெரியதாக்கி வேலை செய்யலாமா?" எனக் கேட்டனர். 1970 இல் லட்சரூபாய் அன்று பெரிய தொகை. அவர் ''நான் சேவைக்கு வந்தேன். இலாபத்திற்கு வரவில்லை" என்றார். 4 ஆண்டு சிறப்பான வேலை செய்தவர், வேலை செய்ய மறுத்தார். வேலையை அழித்தார். ஸ்தாபனம் அழிந்தது. மாதம் தேவையான 3000/- ரூபாய் இல்லாமல் நொடித்துப்போயிற்று. அந்த நிலையில் இலட்சரூபாய் ஏற்கனவே வேண்டாம் என்றவர் இலட்சரூபாய் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்து, பெற்று, வெளியே போய், "இன்று சாப்பாட்டுக்குக் கஷ்டம்" என்ற நிலையை எய்தினார்.

ஸ்தாபனம் அளிக்க முன்வந்ததை ஏற்றிருந்தால் இவரும் முன்னுக்கு வந்திருக்கலாம், சேவையும் பலித்திருக்கும், ஸ்தாபனம் ஜெயித்திருக்கும்.

மனத்திலில்லாத உண்மையை வாயால் பேச விரும்பும் போலி கள் நடைமுறையாகும் இது.

* பணமும், பொருளும், வசதியும், செல்வமும், செல்வாக்கும், பதவியும், அந்தஸ்தும், ஆரோக்கியமும், திறமையும், அறிவும், ஞானமும் நேர்மையாகவும் பெறலாம். நாணயமின்றியும் பெறலாம். இதுவரை நாணயமாகப் பெற்றவர் குறைவு. Rockefeller உலகிலேயே பெரும் பணக்காரர் எனப் பெயரெடுத்தவர். அவர் petrol மூலம் பெரும் பணம் சம்பாதித்தார். அத்தனையும் தவறான வழிகள். அவர் சந்ததியார்கள் பெண்களானால் திருமணமானவுடன் பெயரை மாற்றிக் கொள்வதால் பெயரில் Rockefeller இருக்காது. அது நிம்மதி. ஆண்கள் அப்பெயரைக் கண்டு வெட்கப்பட்டனர். Rockefeller பேத்திக்கு, மகன் அவளுக்கு உரிமையுள்ள பங்கைக் கொடுத்தபின் அதிகபட்சமாக $ 25 (கோடி ரூபாய்) மில்லியன் கொடுத்ததை பேத்தி "இது சரியான பணமில்லை" என மறுத்துவிட்டார். நேர்மையாகச் சம்பாதித்தவர் குறைவு. சம்பாதிப்பது கஷ்டம்.

அன்பர்கள் நேர்மையாக மட்டுமே சம்பாதிக்க முடியும். நேர்மைக்கு உத்திரவாதமளித்தால் பெரும் பணம் தேடி வரும். அப்படி வரும் செல்வம்,

> செல்வமன்று, அருளை வெளிப்படுத்தும் செல்வம். அச்செல்வத்தை நாடுவது அருளின் வெளிப்பாட்டை நாடுவதாகும்.

* ஒரு லட்சம் பேரைக் கூட்டி கூட்டம் போட முடியாது. ஒருவரால் முடியுமானால், அது பெரிய காரியம். அக்கூட்டத்தில் கலவரம் ஏற்படுத்தி கலைப்பது எளிது. அருளைத் தாங்கிவரும் பொருளைச் சேர்க்க முயல்வது கடினம். எந்த சிறு குறையும் தடையாகும். சாதிக்க ஆயிரம் திறமை வேண்டும். தடுக்க எந்தத் திறமையும் தேவையில்லை.

* வாழ்வில் உயர்வு, அன்னையை நெருங்குதல்.

* எந்த நிலையிலிருந்து உயர்ந்தாலும் அது ஆன்மீக முன்னேற்றமாகும்.

* நம் முயற்சி முழுமையானால், பலன் அம்சத்திற்குரியதாக வரும்.

* எவருக்கும் முன்னேற்றமுண்டு, உச்சகட்ட முன்னேற்றம் அனைவருக்கும் உண்டு.
* நம்பிக்கையும், முயற்சியும் பலன் தரும்.
* நல்லெண்ணமே அடிப்படை. அடிப்படையில்லாவிட்டால் எதுவுமில்லை.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆர்வமிருந்தால்தான் படிக்கிறோம். பக்தியோடு கூடிய ஆர்வமிருந்தால்தான் அன்னை நூல்களைப் பயில முடியும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நல்லதைச் செய்து கெட்டதை நாம் விலக்குகிறோம். இறைவன் தவறான செயலை விலக்குவதில்லை. ஆனால் நல்ல நோக்கத்துடன் அதைச் செய்வான்.

**Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.**
**Editor: Karmayogi**

# 2000 AD

* நாள் பிறக்கும்பொழுது தெம்பு பிறக்கிறது.
* மாதப் பிறப்பு, வருஷப் பிறப்புகளைக் கொண்டாடுகிறோம்.
* நூற்றாண்டு பிறப்பது நூறு ஆண்டுக்கொருமுறை வருவது.
* 1000 ஆண்டு முடிவதும், அடுத்த 1000 பிறப்பதும் **(millennium)** பூமாதேவிக்குப் பொங்கலிடும் நேரம். பெருஞ் சக்தி பிரவாகமாக எழும் நாள் அது.
* **We have asked the Highest, the greater boon for earth.** பூமா தேவிக்கு வரம் கேட்டோம். அது மிகப் பெரிய வரம். இறைவனை நாம் கேட்டோம் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.
* அது பூர்த்தியாக ஒரே நிபந்தனை - பூரணச் சரணாகதி.
* மனம் பூரணச் சரணாகதி மனப்பான்மையை ஏற்று ஜனவரி முதல் தேதி 2000 **AD** இல் அது பூர்த்தியாக முயன்றால்,
  - **அவர் ஜீவன் அன்றெழும் பிரவாகமான சக்தியால் நிறையும்.**
  - **புவிவாழ்வில் அவர் வாழ்வு பூரணப் பங்கு பெறும்.**
  - **அவர் வாழ்வும் பூவுலக வாழ்வும் ஒன்றே என்றாகும்.**

# சட்டம், நாணயம்

சிறிய சொத்து. குடும்பத் தகராற்றால், குடும்பத்தில் உரிமையில்லாதவர் சொத்தை அனுபவிக்கின்றனர். உரிமையுள்ளவருக்குக் கேட்டுப் பெறும் மனநிலையில்லை. நாட்கள் கடந்தன. குடும்பத் தலைமை மாறும் நேரம். மாறியபின் சொத்து என்ன ஆவது? இன்று தவறாக அனுபவிப்பவர் சொத்தையே எடுத்துக்கொள்ளும் நிலை. *சொத்து, பணம் விஷயத்தில் உரிமையுள்ளவர் கேட்டாலும், அனுபவிப்பவரிடமிருந்து பெறுவது அரிது.* அதுவே உலக அனுபவம். அன்னை அனுபவம் வேறு. தகுதியில்லாதவருக்கு அன்பர் உரிமையை விட்டுக்கொடுத்தால், சூட்சும உலகில், அன்பருக்கு உள்ளதும் போகும். பிறர் பொருள் நம்மிடமிருக்கக்கூடாது என்பதுபோல் நம் உடமை உரிமையற்ற அடுத்தவர்க்குப் போகக்கூடாது என்பதும் உண்மை.

அன்பர் தினமும் ஒரு முறை அன்னையிடம் சொல்வதை எழுத்தால் எழுதி வைப்பார். தலைமை மாறும் நேரம் தலைமை மறைந்தது. உரிமையற்ற அனைவரும் ஒன்றுசேர்ந்து உரிமையுள்ளவரை சொத்தைப் பெற்றுக் கொள்ளும்படிக் கேட்டனர். அன்பரைப் பொருத்தவரை அது அன்னை செயல்.

அந்தச் சொத்து சம்பந்தமான பணம் ஒன்று, தொகை கணிசமானது. சொத்து வந்தவுடன் பணத்திற்குரிய தஸ்தாவேஜும் வந்தது. அன்பருக்கு இதுபோன்று ஒரு விஷயமிருப்பதே தெரியாது. தஸ்தாவேஜு காலாவதியாகி மாதக்கணக்காகிவிட்டது. அதனால் அன்பர் அதைப் பொருட்படுத்தவில்லை. மேலும் பல மாதங்கள் கழிந்து ஒரு சமயம் உறவினர் ஒருவர் வந்தார். “அந்தப் பணம்” என்ன ஆயிற்று எனக் கேட்டார். காலாவதியாகிவிட்டது என்றார் அன்பர். உறவினர் அந்த தஸ்தாவேஜை எடுத்துப் போனார். பணத்துடன் திரும்பிவந்தார். “உலகில் சட்டமா முக்கியம், நாணயமில்லையா?” என்று கூறி பணத்தை உரியவரிடமிருந்து பெற்று வந்ததாகக் கூறினார்!

**சொத்துக்காகச் செய்த பிரார்த்தனை, தாமறியாத பணம் காலாவதியான பின் வர உதவியது பணத்தைப் பெற்று வந்த உறவினர் அறியாத ஒன்று!**